உ

கடவுள்துணை.

திருக்குற்றாலக்குறவஞ்சி.

இஃது

சரவணபுரம்.

சண்முகமுதலியாரவர்களால்

பார்வையிடப்பட்டு

புரசபாக்கம்

ஏழுமலைப்பிள்ளையவர்களது

விவேகவிளக்கஅச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1883

உ

திருச்சிற்றம்பலம்.

திருக்குற்றாலக் குறவஞ்சி.

விநாயகர்துதி.

ஆசிரியவிருத்தம்.

பூமலியிதழிமாலை புனைந்தகுற்றாலத்தீசர்
கோமலர்ப்பாதம்போற்றிக் குறவஞ்சித்தமிழைப்பாட
மாமதத்தருவிபாயு மலையெனவளர்ந்தமேனிக்
காமலிதருப்போலைந்து கைவலான்காவலானே.

சுப்பிரமணியக்கடவுள்துதி.

ஆசிரியவிருத்தம்.

பன்னிருகைவேல்வாங்கப்பதினொருவர்படைதாங்கப்பத்துத்திக்கும்
நன்னவவீரரும்புகழமலைகளெட்டுங்கடலேழுநாடியாடப் [யத்
பொன்னின்முடியாறேந்தி யஞ்சிதலையெனக்கொழித்துப்புயநான்மூன்று
தன்னிருதாடருமொருவன் குற்றாலக்குறவஞ்சித்தமிழ்தந்தானே.

திரிகூடநாதர்துதி - ஆசிரியவிருத்தம்.

திளைகளாய்க்கிளைத்தபலாக்கொம்பெலாஞ்சதுர்வேதக்கிளைகளீன்ற
களையெலாஞ்சிவலிங்கங் கனியெலாஞ்சிவலிங்கங்கனிகளீன்ற
சுளையெலாஞ்சிவலிங்கம் வித்தெலாஞ்சிவலிங்கச்சொரூபமாக [வோமே
விளையுமொருகுறும்பலவின் முளைத்தெழுந்தசிவக்கொழுந்தைவேண்டு

குழல்வாய்மொழியம்மைதுதி- ஆசிரியவிருத்தம்.

தவளமதிதவழ்குடிமுப்பனிவரையின்முனைத்தெழுந்துதகைசேர்முக்கட்
பவளமலைதனிலானசபடர்ந்தேறிக் கொழுந்துவிட்டுப்பருவமாகி
யவிழுநறைப்பூங்கடப்பந் தாமரையுமீன்றொருகோட்டாம்பலீன்று
குவலயம்பூத்தருள்கொடியைக் கோதைகுழல்வாய்மொழியைக்கூறுவோ

மூவர்துதி-ஆசிரியவிருத்தம். [மே

தலையிலேயாறிருக்கமாமிக்காகத்தாங்குகடலேழழைத்ததிருக்குற்றாலர்
சிலையிலேதடித்ததடம்புயத்தைவாழ்த்திச் செழித்த} குறவஞ்சிநாடகத்
தைப்பாட,வலையிலேமலைமிதக்கவேறினானுமத்தியிலேபூவையங்காளழை
ப்பித்தானுங், கலையிலேகிடைத்த பொருளாற்றிப்போட்டுக்கனகுளத்தி
லெடுத்தானுங்காப்பதாமே.

அகத்தியர்வாதவூரர்துதி-ஆசிரியவிருத்தம்.

நித்தர்திரிகூடலிங்கர்குறவஞ்சி நாடகத்தைநிகழ்த்தவேண்டி
முத்தர்திருமேனியெல்லா முருகவேதமிழுரைத்தமுனியைப்பாடி
இத்தனுவிலாத்துமம்விட்டிறங்கு நாட்சிலேட்டுமம்வந்தேறுவண்ணம்
பித்தனடிதுணைசேர்ந்த வாதவூரானடிகள்பேணுவோமே.

இ-ம்-கல்யாணி-ஆதிதாளம்.
கண்ணிகள்.

௧ வங்காரபூஷணம்பூட்டித்திலதந்தீட்டி
மாரனைகண்ணாலேமருட்டிச்
சிங்காரமோகனப்பெண்ணாள்வசந்தவல்லி
தெய்வரம்பைபோலவேவந்தாள்

௨. கண்ணுக்குக்கண்ணிணைசொல்லத்-திரிகூடக்
கண்ணுதலைப்பார்வையால்வெல்லப்
பெண்ணுக்குப்பெண்மயங்கவே-வசந்தவல்லி
பெடையன்னம்போலவேவந்தாள்

௩. கையாரச்சூடகமிட்டு-மின்னாரைவெல்லக்
கண்ணிலொருநாடகமிட்டு
ஒய்யாரமாகநடந்து-வசந்தவல்லி
யோவியம்போலவேவந்தாள்

௪. சல்லாபமார்துலீலர்-குற்றாலநாதர்
சங்கநெடும்வீதிதனிலே
உல்லாசமாதுரதிபோல்-வசந்தவல்லி
யூர்வசியுநாணவேவந்தாள்

(இதுவுமது)

இ-ம் பைரவி-அடதாளசாப்பு,

கண்ணிகள்.

௧. இருண்டமேகஞ்சுற்றிச்சுருண்டு சுழியெறியுங்கொண்டையாள்குழை
எறியாடிநெஞ்சைச்சூறையாடும்விழிக்கெண்டையாள்
திருந்துபூமுருக்கினரும்புபோலிருக்குமிதழினாள்-வரிச்
சிலையைப்போல்வளைந்துபிறையைப்போலிலங்குநுதலினாள்,

௨. அரம்பைதேசவில்லும்விரும்பியாசைசொல்லும்புருவத்தாள்பிறர்
அறிவமையக்குமொருகருவமிருக்குமங்கைப்பருவத்தாள்
கரும்புபோலினித்துமருந்துபோல்வடித்தசொல்லினாள்-கடல்
கத்துந்திரைகொழித்தமுத்துநிரைபதித்தபல்லினாள்.

௩. பல்லினழகையெட்டிப்பார்க்குமூக்கிலொருமுத்தினாள்-மதி
பழகும்வடிவுதங்கியழகுகுடிகொளுமுகத்தினாள்
வில்லுப்பணிபுனைந்துவல்லிக்கமுகைவென்றகழுத்தினாள்-ஜகம்
விலையிட்டெழுதியின்பநிலையிட்டெழுதுந்தொய்யிலெழுத்தினாள்.

௪. கல்லுப்பதித்ததங்கச்செல்வக்கடகமிட்டசெங்கையாள்-எங்குங்
கச்சுக்கிடக்கினுந்தித்திச்சுக்கிடக்குமிருகொங்கையாள்
ஒல்லுங்கருத்தர்மனக்கல்லுஞ்சுழிக்குமெழிலுந்தியாள்-மீது
ஒழுங்குகொண்டுள்ளத்தைவிழுங்குஞ்சிறுரோமப்பந்தியாள்

௫. துடியுள்ளடக்கியொருபிடியுள்ளடங்குஞ்சின்னவிடையினாள்-காமத
துட்டனரண்மனைக்குக்கட்டுங்கதலிவாழைத்துடையினாள்

அநுபல்லவி.

அவனிபோற்றியகுறும்பலாவுறை மவுனநாயகரெவனநாயகர்
சிவனுமாயரியனுமானவர் கவன்மால்விடையதனிலே (பவனி)

சரணங்கள்.

௧, அண்டர்கூட்டமுமுனிவர்கூட்டமுமசுரர்கூட்டமுமனிதராகிய
தொண்டர்கூட்டமுமிமைப்பிலாரெனச்சூழ்ந்துதனித்தனிமயங்கவே
பண்டைநாரிவர்தேவரிவரெனப்பகுத்துநிறுவியவேளைதொறுந்தொறும்
மண்டலீகரைநந்திபிரம்படி மகுடகோடியிற்புடைக்கவே,

௨, தடுப்பதொருகரங்கொடுப்பதொருகரந்தரித்த சுடர்மழுவிரித்ததொரு
கரம்,எடுத்தசிறுமறிபிடித்ததொருகரமிலங்கைபணியணு துலங்கவே
அடுத்தவொருபுலிகொடுத்தசோமனு மானைகொடுத்தவிதானச்சேலை
யும்,உடுத்ததிருமருங்கசையமாலயன்றொடுத்தபரிகரிமிசையவே (பவ

௩, தொடருமொருபெருச்சாளியேறிய தோன்றல்செயப்படைதாங்கவே
யடல்குலாவியதோகைவாகனம்தரசுவேல்வலம்வாங்கவே
படலமார்பினிற்கொன்றைமாலிகை பதக்கமணியொளிதேங்கவே
யுடையநாயகன்வரவுகண்டுகண்டுல கெலாந்தழைத்தோங்கவே (பவ)

௪, இடியின்முழக்கொடுபடருமுகிலெனயானைமேற்கனபேரிமுழக்கமுந்
துடியின்முழக்கமும்பரந்துதிசைக்கரிதுதிக்கையாற்செவிபுதைக்கவே
அடியர்முழக்கியதிருப்பல்லாண்டிசையடைத்தசெவிகளுந்திறக்கமூவ
ர்கள்,வடிசெய்தமிழ்திருமுறைகளொருபுறமறைகளொருபுறம் விளங்
கவே. (பவனி)

௫, கனகதம்புருகின்னரங்கழலாசவீணைமிழற்றவே
யனகர்திருமுத்தின்சிவிகைகவிகைபொன்னாலவட்டநிழற்றவே
வநிதைமார்பலருஞ்சஞ்சாமரைவரிசைவிசிறிசுழற்றவே
தனதனிந்திரன்வருணன்முதலிய சகலதேவரும்வழுத்தவே (பவனி)

௬, சைவர்மேலிடச்சமணர்கீழிடச் சகலசமயமுமேற்கவே
கைவலாழியங்கருணைமாலொடு கமலத்தோன்புடைகாக்கவே
ஐவர்நாயகன்வந்தனன்பலவமரர்நாயகன்வந்தனன்
தெய்வநாயகன்வந்தனனெனச்சின்னமெடுத்தெடுத்தார்க்கவே(பவனி)

௭, சேனைபெருக்கமுந்தானைப்பெருக்கமுந்தேரின்பெருக்கமுந்தாரின்பெ
ருக்கமும்,ஆனைப்பெருக்கமுங்குதிரைப்பெருக்கமுமவனிமுழுதினும்
நெருங்கவே, மோனைக்கொடிகளின்காடுகெடுவெளிமூடியடங்கலுமோ
டியிருண்டபின், ஞானச்சுடர்விரியிடபகேதனமெழுந்துதிசைதிசைவி
ளங்கவே. (பவனி)

௮, கொத்துமலர்க்குழல்தெய்வமங்கையர்குரவைபரவையைநெருக்கவே
யொத்ததிருச்செவியிருவர்பாடல்களுலகமேழையுமுருக்கவே
மத்தளம்புயல்போன்முழக்கிடமயிலனார்நடம்பெருக்கவே
சத்திபயிரவிகௌரிகுழன்மொழித்தையலாளிடமிருக்கவே. (பவனி)

பவனிகாணப்பெண்கள்வருகின்ற

விருத்தம்.

பாலேறும்விடையில்வருந்திரிகூடப்பெருமானார்பவனிகாணக்
காலேறுங்காமனுக்குக்கையேறும் படைப்பவுஞ்சாய்க்கன்னிமார்கள்
சேலேறுங்கலகவிழிக்கணைதீட்டிப்புருவநெடுஞ்சிலைகள்கோட்டி
மாலேறப்பொருதுமென்றுமணிச்சிலம்புமுரசறையவருகின்றாரே

பெண்கள்சொல்லுகின்ற- கண்ணிகள்.

இராகம்-புன்னாகவராளி சாப்புதாளம்.

௧, ஒருமானைப்பிடித்துவந்தபெருமானைத்தொடர்ந்தவரு
மொருகோடிமான்கள்போல வருகோடிமடவார்

௨, புரிநூலின்மார்பனிவனயனென்பாராயனாகிற்
பொங்கரவமேதுதனிச் சங்கமேதென்பார்

௩, விரிகருணைமாலென்பார்மாலாகில்விழியின்மேல்
விழியுண்டோமுடியின்மேல் முடியுண்டோவென்பார்

௪, இருபாலுநான்முகனுந்திருமாலும்வருகையா
லீசனிவன்திரிகூட வாசனிவனென்பார்

௫, ஒருகைவளைபூண்டபெண்கள்ஒருகைவளைப்பூணமறந்
தோடுவார்நகைப்பவரை நாடுவார்கவிழ்வார்

௬, மெய்வளையுமறுவுடையதெய்வநாயகன்முடித்த
வெண்மதியம்விளங்குதெங்கள் பெண்மதியோவென்பார்

௭, இருதனத்துரவிக்கைதன்னையணையிலுடைதொடுவா
இந்தவுடைரவிக்கையெனச் சந்தமுலைக்கிடுவார்

௮, கருதுமனம்புறம்போகக்கண்ணுக்குமையெடுத்த
கையுமாயொருகண்ணிட்ட மையுமாய்வருவார்

௯, திருபனிவனன்னகரத்தெருவிலேநெடுநேரம்
நில்லானோஒருவசனஞ் சொல்லானோவென்பார்

௰, மைவளைத்துக்கிடக்குமிவன்மெய்வளையும்பாம்புகட்குப்
பசியாதோதென்றலைத்தான் புசியாதோவென்பார்

௰௧, இவ்வளைக்கைத்தோளழுந்தவிவன்மார்பிலழுந்தாலு
வென்முலைநமக்கெழுந்த வன்னமுலையென்பார்

௰௨, மைவளையுங்குழல்சோரக்கைவளைகொண்டாணிதென்ன
ஞாயமோசடைதரித்த ஞாயமோவென்பார்

வசந்தவல்லிவருகின்ற-விருத்தம்.

நன்னகர்ப்பெருமான்முன்போய் நாணமுங்கலையுந்தோற்ற
கன்னியர்சறுப்போற்சாட்டிக் காமவேள்கலகமூட்டிப்
பொன்னணிதிலகந்தீட்டிப்பூமலர்மாலைசூட்டி
வன்னமோகினியைக்காட்டி வசந்தமோகினிவந்தாளே.

இ-ம்-கல்யாணி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

௧ வங்காரபூஷணம்பூட்டித்திலதந்தீட்டி
மாரனைகண்ணாலேமருட்டிச்
சிங்காரமோகனப்பெண்ணாள்வசந்தவல்லி
தெய்வரம்பைபோலவேவந்தாள்

௨. கண்ணுக்குக்கண்ணிணைசொல்லத்-திரிகூடக்
கண்ணுதலைப்பார்வையால்வெல்லப்
பெண்ணுக்குப்பெண்மயங்கவே-வசந்தவல்லி
பெடையன்னம்போலவேவந்தாள்

௩. கையாரச்சூடகமிட்டு-மின்னாரைவெல்லக்
கண்ணிலொருநாடகமிட்டு
ஒய்யாரமாகநடந்து-வசந்தவல்லி
யோவியம்போலவேவந்தாள்

௪. சல்லாபமாதுலீலர்-குற்றாலநாதர்
சங்கமெரும்வீதிதனிலே
உல்லாசமாதுரதிபோல்-வசந்தவல்லி
யூர்வசியுநாணவேவந்தாள்

(இதுவுமது)

இ-ம் பைரவி-அடதாளசாப்பு,

கண்ணிகள்.

௧. இருண்டமேகஞ்சுற்றிச்சுருண்டு சுழியெறியுங்கொண்டையாள்குழை
ஏறியாடிநெஞ்சைச்சூறையாடும்விழிக்கெண்டையாள்
திருந்துபூமுருக்கினரும்புபோலிருக்குமிதழினாள்-வரிச்
சிலையைப்போல்வளைந்துபிறையைப்போலிலங்குநுதலினாள்,

௨. அரம்பைதேசவில்லும்விரும்பியாசைசொல்லும்புருவத்தாள்பிறர்
அறிவமைபக்குமொருகருவமிருக்குமங்கைப்பருவத்தாழ்
கரும்புபோலினித்துமருந்துபோல்வடித்தசொல்லினாள்-கடல்
கத்துந்திரைகொழித்தமுத்துநிரைபதித்தபல்லினாள்.

௩. பல்லினழகையெட்டிப்பார்க்குமூக்கிலொருமுத்தினாள்-மதி
பழகும்வடிவுதங்கியழகுகுடிகொளு முகத்தினாள்
வில்லுப்பணிபுனைந்துவல்லிக்கமுகைவென்றகழுத்தினாள்-ஜகம்
விலையிட்டெழுதியின்பவிலையிட்டெழுதுந்தொய்யிலெழுத்தினாள்.

௪. கல்லுப்பதித்ததங்கச்செல்வக்கடகமிட்டசெங்கையாள்-எங்குங்
கச்சுக்கிடக்கினுந்தித்திச்சுக்கிடக்குமிருசொங்கையாள்
ஒல்லுங்கருத்தர்மனக்கல்லுஞ்சுழிக்குமெழிலுந்தியாள்-மீது
ஒழுங்குகொண்டுள்ளத்தைவிழுங்குஞ்சிறுரோமபந்தியாள்

௫. துடியுள்ளடக்கியொருபிடியுள்ளடங்குஞ்சின்னவிடையினாள்-காமத
துட்டனரண்மனைக்குக்கட்டுங்கதலிவாழைத்துடையினாள்

அடுக்குவர்ணச்சேலையெடுத்துநெறிபிடித்தவுடையினாள்-மட
அன்னநடையிலொருசின்னநடையிலும்நடையினாள்
௬. வெடித்தகடலமுதையெடுத்து வடிவுசெய்தமேனியாள்-ஒரு
வீமப்பாகம்பெற்றகாமப்பாலுக்கொத்தசீனியாள்
பிடித்தசுகந்தவல்லிக்கொடிபோல்சந்தவல்லிபெருக்கமே
பீடவாசர்திரிகூடநாதர்சித்தமுருக்குமே.

வசந்தவல்லி-பந்தடிக்கின்ற

விருத்தம்.

வித்தகர்திரிகூடத்தில் வெளிவந்தவசந்தவல்லி
தத்துறுவிளையாட்டாலோ தடமுலைப்பணைப்பினாலோ
நத்தணிகரங்கள்சேப்ப நாலடிமுன்னேயோங்கிப்
பத்தடிபின்னேவாங்கிப் பந்தடிபயில்கின்றாளே.

இ-ம்-பைரவி-சாப்புதாளம்.

கண்ணிகள்.

௧. செங்கையில்வண்டுகலீர்கலீரென்றுசெயஞ்செயமென்றாட- இடை
சங்கதமென்றுசிலம்புபுலம்பொடுதண்டைகலந்தாட- இருகொங்
கைகொடும்பகைவென்றனமென்றுகுழைந்துகுழைந்தாட-மலர்ப்
பைங்கொடிநங்கைவசந்தசௌந்தரிபந்துபயின்றனளே.
௨. பொங்குதனங்குழைமண்டியகொண்டைபுரண்டுபுரண்டோட-குழன்
மங்குலில்வண்டுகலைந்ததுகண்டுமதன்சிலைவண்டோட-இனி
இங்கிதுகண்டுலகென்படுமென்றிடைதிண்டாட-மலர்ப்
பங்கயமங்கைவசந்தசௌந்தரிபந்துபயின்றனளே.
௩. சூடகமுன்கையில்வால்வளைகண்டிருதோள்வளைநின்றாட- புனை
பாடகமுஞ்சிறுபாதமுமங்கொருபாவனைகொண்டாட-நய
நாடகமாடியதோகைமயிலெனநன்னகர்வீதியிலே-அணி
யாடகவல்லிவசந்தவொய்யாரியடர்ந்துபந்தாடினளே.
௪. இந்திரையோவிவள்சுந்தரியோதேவரம்பையோமோகினியோ-மன
முந்தியதோவிழிமுந்தியதோகரமுந்தியதோவெனவேளயர்
சந்திரசூடர்குறும்பலவீசுரர்சங்கணிவீதியிலே-மணிப்
பைந்தொடிநாரிவசந்தவொய்யாரிபொற்பந்துகொண்டாடினளே.

இதுவும்-வசந்தவல்லி- பந்தாடுகிற

விருத்தம்,

கொந்தடிப்பூங்குழல்சரியநன்னகரில்வசந்தவல்லிகொடியகாமன்
முந்தடிபிந்தடியிடைபோய்முன்றடிநாலடிநடந்துமுடுகிமாதர்

சந்தடியிற்றிருகியிடசாரிவலசாரிசுற்றிச்சகிமார்சூழப்
பந்தடிக்கும்பாவனையைப் பார்க்கவயனாயிரங்கண்படைத்திலானே

தரு-இ-ம் காம்போதி-ஆதிதாளம்,

பல்லவி.

பந்தடித்தனள்-வசந்தசுந்தரிவிந்தையாகவே

அநுபல்லவி.

மந்தரமுலையேசலாடமகரக்குழைகளூசலாடச்-சுந்தரவிழிபூசலாடத்
தொங்கத்தொங்கத்தொங்கத்தொம்மெனப் (பந்த)

சரணங்கள்.

௧. பொன்னிநொளிவில்வந்துதாவியமின்னொளிவுபோலவே
சொன்னயத்தனைநாடிநாடித்தோழியருடன்கூடிக்கூடி
நன்னகர்த்திரிகூடம்பாடிநகுர்ததத்திகுர்த்திகுர்தொம்மெனப் (பந்த)

வசந்தவல்லி-சுவாமிகளைக்காண்கிற

விருத்தம்.

வருசங்குவீதிதன்னில் வசந்தபூங்கோதைகாலி
லிருபந்துகுதிகொண்டாட விருபந்துமுலைகொண்டாட
வொருபந்துகைகொண்டாட வொருசெப்பிலஞ்சுபந்துந்
தெருவந்துவித்தையாடுஞ் சித்திரையெதிர்கண்டாளே.

தரு-இ ம்-அடாணா-ரூபகதாளம்.

பல்லவி.

இந்தச்சித்தாராரோ-வெகு

அநுபல்லவி.

விந்தைக்காரராகவிடையில்வந்தாரே (இந்தச்)

சரணங்கள்.

௧. நாகம்புயத்திற்கட்டிநஞ்சுகழுத்திற்கட்டிக்
காகமணுகாமலெங்குங்காடுகட்டி
பாகந்தனிலொருபெண்பச்சைக்கிளிபோல்வைத்து
மோகமாயொருபெண்ணைமுடியில்வைத்தார். (இந்தச்)

௨. மெய்யிற்சிலம்பழகுங்கையின்மழுவழகும்
மையார்விழியார்கண்டால்மயங்காரோ
செய்யசடையின்மேலேதிங்கட்கொழுந்திருக்கப்
பையைவிரிக்குதம்மாபாம்புசும்மா (இந்தச்)

௩. அரிக்கண்பார்வையாலேயணங்கன்றங்கமாக
உருக்கிப்போட்டார்கண்டவுடனேதான்
பெருக்கம்பார்க்கிலெங்கள்திருக்குற்றாலர்போல
விருக்குதிவர்செய்மாயமொருக்காலே. (இந்தச்)

தோழிமார்சொல்லக்கேட்டு
வசந்தவல்லி- மோகங்கொள்ளுதல்,
விருத்தம்.

திங்களைமுடித்தார்கண்டாய்திரிகூடச்செல்வர்கண்டா
யெங்குளசித்துக்கெல்லாமிறையவரிவரோயென்று
நங்கைமார்பலருங்கூறநன்மொழித்தேறன்மாத்தி
மங்கையர்வசந்தவல்லிமனங்கொண்டாள்மயல்கொண்டாளே.

இ-ம் புன்னாகவராளி- ரூபகதாளம்.
கண்ணிகள்.

௧, முனிபரவவினியானோமுழுப்பலவின்கனிதானோ
கனியில்வைத்தசெந்தேனோகருத்துருக்கவந்தானோ
தினகரன்போற்சிவப்பழகுந்திருமிடற்றிற்கறுப்பழகும்
பனகவணிக்காதுங்கண்டாற்பாவையுந்தானுருகிடாதோ.

௨, வாகனைக்கண்டுருகுதையோமயக்கமதாய்வருகுதையோ
மோகமென்பதிதுதானோமுன்னமேநானறிவேனோ
ஆகமெல்லாம்பசந்தேனேயன்னைசொல்லுங்கசந்தேனே
தாகமன்றிப்பூணேனேசரிவளையுங்காணேனே,

பாங்கிகள்புலம்பல்,
விருத்தம்.

நடைகண்டாலன்னந்தோற்குநன்னகர்வசந்தவல்லி
விடைகொண்டானெதிர்போர்ச்சங்கவீதியிற்சங்கந்தோற்றாள்
சடைகொண்டானுடைதான்கொண்டுதன்னுடைகொடுத்தானைய
னுடைகொண்டவழக்குக்தானோவூர்கண்டதேர்கண்டாளே.

இ-ம்-தோடி சாப்புதாளம்.
கண்ணிகள்.

௧, ஆசைகொண்டுபாரில்விழுந்தாள்மோசமானென்பார் விளை
யாடாள்பாடாள்வாடாமாலைசூடாள்காணென்பார்
பேசானோதோமோசமென்னமோசமோவென்பார் காமப்
பேயோவென்பார்பித்தோவென்பார்மாயமோவென்பார்

௨, ஐயோவென்னசெய்வோமென்பார்தெய்வமேயென்பார்
கைப்பாச்சோவென்பார்மூச்சேதென்பார்பேச்சேதேவென்பார்
கையிற்றிருநீறெடுப்பாமதையலாரெல்லாம்-குலக்
கையர்திரிகூடநாதாகண்பாராரோயென்பார்

வசந்தவல்லியைப்- பாங்கிகளுபசரித்தல்,
விருத்தம்.

வசனவர்திருக்குற்றாலர்மையலால்வசந்தவல்லி
தானுடல்சோர்ந்தாளென்று தமனியமாடஞ்சேர்த்து

மேனியாரழகுதோற்ற மின்னனார்விழுந்தபேரைக்
கூனைகொண்டமிழ்த்துவார்போற் குளிர்ச்சியால்வெதுப்புவாரே.

இ-ம்-கல்யாணி-சாப்புதாளம்,

கண்ணிகள்,

௧. முருகுசந்தனக்குழம்பு பூசுவார்-விரகத்தியை
மூட்டிமூட்டிவிசிறிவீசுவார்
கருகுதேயுடலுருகுதேயென்பார்-விரித்தவிருங்
கரியுதெமுத்தம்பொரியுதேயென்பார்

௨. அருகிலிருந்துகதைகண்டத்துவார்-எடுத்துமாதர்
அணைத்துவாழைக்குருத்திற்கிடத்துவார்
பெருநன்னகர்க்குறும்பலாவினார்-வசந்தமோகினிப்
பெருநிலாவினொடுகுலாவினாள்

வசந்தவல்லி-சந்திரதூஷணஞ்செய்தல்,

விருத்தம்,

பெண்ணிலோர்குழன்மொழிக்கோர்
பங்குகொடுத்தவர்கொடுத்தபிரமையாலே
மண்ணிலேமதிமயங்கிக்கிடக்கின்றே
னெனக்குமதிமயக்கந்தானோ
கண்ணிலேநெருப்பைவைத்துக்
காத்துவாருடன்கூடிக்காந்திக்காந்தி
விண்ணிலேநெருப்பைவைத்தாய்
தண்ணிலாக்கொடும்பாவிவெண்ணிலாவே. (௯௧)

இராகம் வராளி-ஆதிதாளம்.

கண்ணிகள்,

௧. தண்ணமுதுடன்பிறந்தாய் வெண்ணிலாவே-அந்தத்
தண்ணளியையேன்மறந்தாய் வெண்ணிலாவே
பெண்ணுடன்பிறந்ததுண்டோ வெண்ணிலாவே-என்றன்
பெண்மைகண்டுங்காயலாமோ வெண்ணிலாவே

௨. விண்ணிலேபிறந்தவற்கோ வெண்ணிலாவே-ஒரு
விட்டுநாளெறிந்ததற்கோ வெண்ணிலாவே
கண்ணில்விழியாதவர்போல் வெண்ணிலாவே-மெத்த
காந்தியாட்டமாயிருப் வெண்ணிலாவே.

௩. ஆகடியஞ்செய்தல்லவோ வெண்ணிலாவே-நீதா
னுட்கடியம்போற்குறைந்தாய் வெண்ணிலாவே
மோகம்வரக்காணேனென்றால் வெண்ணிலாவே-இந்த
வேகமுனக்கானதென்ன வெண்ணிலாவே

௪. நாகமென்றேயெண்ணவேண்டாம் வெண்ணிலாவே-இரா
வாகுகுழல்பின்னல்கண்டால் வெண்ணிலாவே
கோகனகமிறழித்தாய் வெண்ணிலாவே-திரிகூட
லிங்கர்முன்போய்க்காய்வாய் வெண்ணிலாவே

வசந்தவல்லி மன்மததூஷணஞ்செய்தல்,

விருத்தம்.

தண்ணிலாமௌலிதந்தமையலானதை யறிந்துதையலார்கள் எண்ணிலாப்பலகையெடுத்தாரின்னகலா நன்னகரென்றெவர்சொன்னாரோ. அண்ணலார்திரிகூடநாதரொன்பா ரென்னளவுமமைத்திடாரோ, வெண்ணிலாக்குடைபிடித்துமீனகேதனம்பிடித்த வேனிலானே.

இம்மதகுலகாம்போதி சாப்புதாளம்,

கண்ணிகள்,

௧ கைக்கரும்பென்னகணையென்னநீயென்ன மன்மதா-இந்தச்
செக்கரும்பாவிநிலாவுமேபோதாதோ மன்மதா
மைக்கருங்கண்ணாளிரதிக்குமால்கொண்ட மன்மதா-விடை
வல்லார்க்குமால்கொண்டபொல்லாப்பென்மேலுண்டோ-மன்மதா

௨. இக்கெல்லாந்தென்றற்புலிவந்துபாயுதே மன்மதா-குயிற்
சின்னம்பிடித்தபினன்னம்பிடியாதே மன்மதா
அக்காளனுஞ்சகிவெட்காமலேசுவான் மன்மதா-அவ
ளல்லாமற்றொருபொல்லாதநீலிகாண் மன்மதா

௩, நேரிழையாளையுமூனையும்பாரடா மன்மதா-கண்ணிற்
நித்திரைதானொருசத்துருவாச்சுதே மன்மதா
பேரிகையேனன்றிபூரிகையேன்பிள்ளாய் மன்மதா-சிறு
பெண்பிள்ளைமேற்பொருதாண்பிள்ளையாவையோ மன்மதா

௪. வார்சடையீதல்லதார்குழற்பின்னல்காண் மன்மதா-நெற்றி
வத்தகண்ணல்லசிந்துரரேகைபார் மன்மதா
ரிபங்காளர்தென்னாரியர்நாட்டினார் மன்மதா எங்கள்
நாதன்னகர்க்குற்றாலர்முன்னமேசெல்லுவாய் மன்மதா

பாங்கிவினவுதல்-விருத்தம்.

படியேழுடையார்திரிகூடப் படைமாமதலைப்பயிற்றியசொக்
கழகேழுயாதிருக்கையிலே யதுநான்பயின்றுளகாதோ

கொடியேமதுரம்பழுத்தொழுகுங் கொம்பேவம்புபொருதமுலைப்
பிடியேமதுகுடிக்கொருபெண் பிள்ளாய்கருத்துவிள்ளாயே.

வசந்தவல்லி பாங்கிக்குரைத்தல்.

இ-ம்-கல்யாணி-சாப்புதாளம்,

கண்ணிகள்,

௧.மெய்யார்க்குமெய்யர்திரிகூடநாயகர்மீதில் மெத்த
மையல்கொண்டேனந்தச் செய்தியைக்கேளாய்நீசகியே
செய்யச்சடையுந்திருக்கொன்றைமாலையழகு-மவர்
கையின்மழுவுமென் கண்ணைவிட்டேயகலாதே,

௨,கங்கைக்கொழுந்தணிதெய்வக்கொழுந்தைநான்கண்டு-குளிர்
திங்கட்கொழுந்தையுந் தீக்கொழுந்தாக்கிக்கொண்டேனே
சங்கக்குழையாளைச் சங்கமறுகினிற்கண்டு இரு
செங்கைக்குட்சங்கமுஞ்சேர்ந்துமருகிவிட்டேனே,

௩,மன்றற்குளவிமதியம்புனைந்தரைக்கண்டு சிறு
தென்றற்குளவினங்கொட்டக்கொட்டநொந்தேனே
குன்றச்சிலையாளர்குற்றாலநாதர்முன்போனேன் மதன்
வென்றிச்சிலைகொண்டுமெல்லவெல்லப்பொருதானே,

௪,பெம்மானைநன்னகர்ப் பேராஜவீதியிற்கண்டு-அவர்
கைம்மானைக்கண்டுகலையைநெகிழவிட்டேனே
செம்மேனிதன்னிற் சிறுகறுப்பானைதான்கண்டு
அம்மாவென்மேனியடங்கலுமேகறுத்தேனே,

௫,வெள்ளிவிடையில் வியாழம்புனைந்தானைக்கண்டு இந்த
நள்ளியதிங்களை ஞாயிறுபோலக்கண்டேனே
எள்ளளவூணுமுறக்கமுமில்லானைக்கண்டு நானும்
எள்ளியவூணுமுறக்கமுமற்றுவிட்டேனே'

பாங்கிபழித்தல் விருத்தம்,

தனைப்பெண்ணுக்கணிபோல்வந்த தமனிக்கொடியேமாதர்,
துணைப்பெண்ணேவசந்தவல்லி சொன்னபேதைமைக்கென்சொல்
வேன்,வனைப்பெண்ணுக்காசை பூண்டுவளர்சங்கமறுகினூடே, ந
ரைத்தமாடேறுவார்க்கோநங்கைநீமயல்கொண்டாயே,

வசந்தவல்லி சுவாமிகளைப்புகழ்ந்துகூறல்,

இ-ம்-சௌராஷ்டிரம்- ரூபகதாளம்.

கண்ணிகள்,

முன்னவர்குற்றாலர்செய்தியின்னமின்னங்கேளாயோமானே அவர்
வாகனத்தின்மால்விடைக்குலோகமெல்லாமோரடிகாண்மானே

சன்னிதியிற் போலவேபொன்னுலகிற்றேவர்செல்வமானே-இன
பஞ்சந்திரரும்சூரியரும்வந்திறங்கும்வாசல்கண்டாய்மானே
நன்னகரிலிருக்குநாதனுருத்திதானுவாசைகொண்டேன்மானே
கன்னியருமாசைகொண்டார்பன்னியருமாசைகொண்டார்மானே
தென்னிலங்கைவாழுமொருகன்னிகைவண்டோதரியாள்மானே-அ
வர்,பொன்னணையிற்சேர்ந்தணையஎன்னதவஞ்செய்தாளோமானே

இதுவும்-வசந்தவல்லி பாங்கிக்குச்சொல்லுகிற

விருத்தம்,

வேரிலேபழுப்பழுத்துத்தூரிரேசுளைவெடித்துவெடித்ததீந்தேன்
பாரிலேயாதாளகங்கைவந்தெனக்குதித்தபதிந்தேன்கங்கை
தீரிலேசுளைபெறுங்குறும்பலாக்கொலுவிருக்குநிமலமூர்த்தி
பேரிலேபிரமைகொண்டபெண்களிலேநானுமொருபெண்கண்டா

பாங்கிசொல்லல்-விருத்தம், [யே

வசந்தவுல்லாசவல்லிவல்லிக்குவெல்லிபேகி
பசந்ததோர்பசப்புங்கண்டால்பரமன்மேலாசைகொண்டாய்
நிசந்தருர்திருக்குற்றாலர்நிரந்தரமூர்த்தியுன்பா
விசைந்திடக்கருமமேதோவிசையநீயிசைத்திடாயே,

வசந்தவல்லி-வருந்துதல்,

இ ம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்

கண்ணிகள்.

௧, புரத்துநெருப்பைமூவர்க்கவித்தவர்மையல்கொண்ட   என்
னுருத்திகாமநெருப்பையவிக்கலார்
பருத்தமலையைக்கையிலினக்கிலார்   கொங்கையான
பருவமலையைக்கையிலிணக்கிலார்

௨, அஞ்சுதலைக்குளாறுதலைவைத்தார்   எனதுமனதிலில்
அஞ்சுதலைக்குமாறுதலைவையார்
நஞ்சுபருகியழகங்கொடுத்தவர்   எனதுவாள்விழி
நஞ்சுபருக்கியழகங்கொடுக்கிலார்

௩, தேவர்துணைதன்சாபந்தீர்த்தவர்   வன்னமாங்குயிற்
சின்னத்துணைதன்சாபந்தீர்த்திலார்
யாவரும்புகழ்திருக்குற்றாலர்தாம்   சகலபேர்க்கு
மிரங்குவாரெனக்கிரங்கிலார்பெண்ணே

பாங்கிசொல்லுகிற-விருத்தம்.

நன்னகர்திருக்குற்றாலநாதர்மேலாசைபூண்டு
சொன்னவர்க்கிணங்காவார்த்தைசொல்லவும்படித்துக்கொண்டாய்

சன்னிதிவிசேஷஞ்சொல்லத்தக்கதோமிக்கமோதாய்
எண்ணிலானதுநான்சொன்னேனினியுனதிச்சைதானே.

வசந்தவல்லி-பாங்கியைத்தூதனுப்புதல்,

தரு இ-ம்-காம்போதி-ஆதிதாளம்

பல்லவி,

தூதுநீசொல்லிவாராய்பெண்ணே குற்றாலர்முன்போய்த்
தூதுநீசொல்லிவாராய்பெண்ணே.

அநுபல்லவி,

ஆதிநாட்சுந்தரர்க்காய்த்தூதுபோனவர்பாலே (தூதுநீ)

சரணங்கள்,

௧, உறங்கவுறக்கமும்வாராது மாயஞ்செய்தாரைமறந்தால்மறக்கவுங் கூடாது பெண்ஜனனமென்று- பிறந்தாலும்பேராசையாகாது- ஆகாதென்றுநான்- அறிந்துஞ்சலுக்கைக்காரர்காசையானேனிப்போது. (தூது)

௨, நேற்றைக்கெல்லாங்குளிர்ந்துகாட்டி- இன்றுகொதிக்கும்- நித்திரைப்பாவிக்கென்னபோட்டி- நடுவேயிந்தக் காற்றுக்குவந்ததொரு சகாட்டிவிரகநோய்க்கு-மாற்றுவருந்துழுக்கண்மருந்தென்னுபரஞ்சேட்டி. (தூது)

௩, வாந்தாலிந்நேரம்வரச்சொல்லி வாராதிருந்தால்-மாலையாகிலுந்தரச்சொல்லு-குற்றாலநாதர்-தந்தாலென்னெஞ்சைத்தரச்சொல்லு-தாராதிருந்தால்· தாம்பெண்ணாகியபெண்ணைநான்விடேனென்றுசொல்லு. (தூது)

வசந்தவல்லி-பாங்கிக்குச்சந்திசமயஞ்சொல்லுதல்.

விருத்தம்,

செவ்வேளையீன்றருள்வார் சிலவேளைவென்றருள்வார் இரும்
யத்தாமே, யவ்வேளையழைத்தருள்வாரவர்வேளை யொருவருக்குமறி
யொண்ணாதால், கைவேழமுரித்தவர்குற்றாலர் கொருவமரருக்குங்கா
ணொணாதால், எவ்வேளைபலவுமுண்டிவியல்வேளையான் சொலக்கே
ண்மின்னன்னே,

தரு இ-ம்-பியாகடை-ஆதிதாளம்,

௧, திரிகூடராஜருக்குத்திருவனந்தல்முதலாகத்
தினமுமொன்பதுகாங் கொலு வீற்சகியே

௨, பெரிதானவபிஷேகமெழுகாலமுமொருவர்
பேசுதற்குச்சமயமல்ல கண்டாய்சகியே

௩, வருநாளிலொருமூன்றுதிருநாளும்வசந்தனு
மாதவழிவருஷவழி சிறப்புஞ்சகியே

௪, ஒருநாளுக்கொருநாளில்வியனாகக்குழன்மொழிப்பெண்
ணாகத்திருக்குங்கொலுவேளை கண்டாய்சகியே
௫, பெத்தரிக்கமிகுந்திருக்குங்குற்றாலநாதலிங்கர்
பெருங்கொலுவிற்சமய மறியாமற்சகியே
௬, சித்தரொடுதேவர்களுஞ்சிவகணங்கள்நடைசெயத்
திருவாசற்கடைநிற்பார் சிலபேர்சகியே
௭, அத்தலையிற்கடந்தவர்கள்நந்திபிரம்படிக்கொதுங்கி
ஆட்கொண்டார்குறட்டில்நிற்பார் சிலபேர்சகியே
௮, மைத்தருங்கண்மாதர்விட்டவண்டுகளுங்கிள்ளைகளும்
வாசல்தொறுங்காத்திருக்குங் கண்டாய்சகியே
௯, கோலமறையோதியசங்காவிசுவநாதனருள்
குற்றாலச்சிவராமநம்பி செய்யுஞ்சகியே
௰, பாலாறுநெய்யாறபிஷேகநைவேத்தியமும்
பணிமாறுகாலமுங் கொண்டருளுஞ்சகியே
௰௧, நாலுமறைப்பழம்பாட்டுமூவர்சொன்னதிருப்பாட்டு
நாலுகவிப்புலவர்புதுப் பாட்டுஞ்சகியே
௰௨, நீலகண்டர்குற்றாலர்தேவியுடன்கொலுவிருப்பார்
நீக்கமில்லையெல்லார்க்கும் பொதுக்காண்சகியே
௰௩, அப்பொழுதுகுற்றாலர்தேவியுடன்கொலுவிருப்பார்
ஆசைசொல்லக்கூடாது கண்டாய்சகியே
௰௪, ஒப்பொழுதுந்திருமேனிதீண்டுவார்வந்துநின்று
முயற்சிசெய்யுந்திருவநந்தம் கூடிச்சகியே
௰௫, கொப்பழகுகுழன்மடந்தைபள்ளியறைதனிலிருந்து
கோயில்புகுமேகரந்தச் சமயஞ்சகியே
௰௬, மைப்பழகுவிழியாயென்பெருமாலைநீசொல்லி
மருவாலைமாக்கிநீ வாராய்சகியே

கொச்சகம்.

தெண்ணீர்வடவருவித்தீர்த்தத்தார்செஞ்சடைமே
விண்ணீர்புனைந்தார்விரகவெம்மைக்காற்றுமல்
கண்ணீர்நறும்புனலாய்க்கைவளையேசெய்களையாயாப்
உண்ணீரிற்கூடலுணைக்கின்றுசெய்வாளே,

கூடல்சிந்து.

இ-ம்.பந்துவராளி தாளம்-திரிபுடை.

௧, பாடியமறைதேடியநாயகர்பன்னகர்பணிதன்னகர்நாயகர்
பாவலர்மனுக்காவலர்நாயகர்பரஞ்சலிபணியாளர்

௨, கோடியமதிசூடியநாயகர்குழன்மொழிபுணரழகியநாயகர்
குறும்பலாவினிற்கூடுவராமேனிற்கூடலேநீகூடாய்.

விருத்தம்.

ஆடல்வலவீதியிலேயங்கணர்முன்போட்டசங்கமாங்குவிட்டில்
தேடல்வளைக்குறிபோலக்குடல்வளைத்திருந்துவல்லிதியங்குபோதி
ல்கூடல்வளைக்கரமசையமாத்திரைக்கோலேந்துமணிக்கூடைதாங்கி
மாடமறுகூடுதிரிகூடமலைக்குறவஞ்சிவருகின்றாளே.

குறத்திவருதல்-ஆசிரியப்பா.

சைவமுத்திரையைவானின்மேற்றரிக்குந்
தெய்வமுத்தலைசேர்திரிகூடமலையான்
வான்புனல்குதட்டுமடைக்குருகினுக்குத்
தேன்புனையேறுபூஞ்சித்திரநதியான்
எறிநீர்செழிக்கவாரிநீர்கொழிக்கு
மாரிநீர்வளர்தென்னாரியநாட்டான்
கன்னிமாப்பழுத்துக்கதலிதேன்கொழித்துச்
செந்நெல்காத்தளிக்குநன்னகர்ப்பதியான்
ஓராயிரமறையோங்கியபரியான்
ஈராயிரமருப்பேந்தியயானையான்
சேவகவிருதுஜெயவிடைக்கொடியான்
மூவகைமுரசுமுழங்குமண்டபத்தான்
அண்டகோடிகளையாணையாலடக்கிக்
கொண்டல்போற்கவிக்குங்கொற்றவெண்குடையான்
வாலசுந்தரிகுழல்வாய்மொழியருட்கண்
கோலவண்டிணங்குங்கொன்றைமாலிகையான்
பூவளர்செண்பகக்காவளர்தம்பிரான்
தேவர்கள்தம்பிரான்திருவருள்பாடி
இலகுநீறணிந்துதிலகமுமெழுதிக்
குலமணிப்பாசியுங்குன்றியும்புனைந்து
சலவைசேர்மருங்கினிற்சாத்தியகூடையும்
வலதுகைப்பிடித்தமாத்திரைக்கோலும்
மொழிக்கொருபசப்புமுலைக்கொருகுலுக்கும்
விழிக்கொருசிமிட்டும்வெளிக்கொருபகட்டுமாய்
உருவசியரம்பைகருவமுமடங்க
முறுவலின்குறும்பால்முனிக்குறும்படங்க

சமனிக்குழலாயால்சடையெலாமடங்கக்
கமனிக்குமலனுங்கடைக்கணுலடங்கக்
கொட்டியவுடுக்குங்கோடரங்கிக்குறிமுதல்
மட்டிலாக்குறிகளுங்கட்டினுலடக்கிக்
கொங்கணமாரியங்குச்சிலர்தேசமும்
செங்கைமாத்திரைக்கோல்செங்கோல்நடாத்தி
கன்னடந்தெலுங்குகலிங்கராச்சியமுந்
தென்னவர்தமிழால்செயத்தம்பதநாட்டி
மன்னவர்தமக்குவலதுகைநோக்கி
இன்னிசைமடவார்க்கிடதுகைநோக்கி
காலமுன்போங்குறிகைப்பலனுங்குறி
மேலினிவருங்குறிவேண்டுவார்மனக்குறி
மெய்க்குறிகைக்குறிவிழிக்குறிமொழிக்குறி
யெக்குறியாயினுமிமைப்பினிலுரைக்கு
மைக்குறிவிழிக்குறவஞ்சிவந்தனளே.

இதுவுமது-விருத்தம்,

சிலைநுதலிற்கஸ்தூரித்திலதமிட்டுநறுங்குழலிற்செச்சைசூடிக் கொலைமதர்க்கணைமையெழுதி மாத்திரைக்கோலவாங்கிமணிக்கூடை தாங்கி,முலைமுகத்திற்குன்றிமணிவடம்பூண்டுதிரிகூடமுதல்வர்சார ல், மலைதனிற்பொன்வஞ்சி குறவஞ்சியபரஞ்சிகொஞ்சிவருகின்றாளே,

தரு-இ-ம்-தோடி-சாப்புதாளம்

பல்லவி,

வஞ்சிவந்தனளேமலைக்குறவஞ்சிவந்தனளே.

அநுபல்லவி.

வஞ்சியெழிலபரஞ்சிவரிவிழிநஞ்சிமுழுமறநெஞ்சிபலவினை
வஞ்சிசடைமுடிவிஞ்சைமலனை நெஞ்சினினைவொடு மிஞ்சுகுறி சொல்வ

சரணங்கள்.

௧,வல்லைநிகர்முலையில்லையெனுமிடைவில்லையணிநுதல்முல்லைபெ ருநகை வெல்லியெனவொருகொல்லிமலைதனில்வல்லியவளிலும் வெல்லியிவளென ஒல்லிவடகனடில்லிவளைபுகழ் புல்லிவருகுறி சொல்லிமதுரிதநல்லி பனைமலைவல்லிகுழன்மொழிசெல்வி புண ர்பவர்கல்விமலைக்குற, (வஞ்சி)

௨, குன்றிலிடுமழைமின்களெனநிரைகுன்றிவடமுலைமுங்கவே- ம ன்றல்கமழ்சிறுதென்றல்வரும்வழி நின்றுதாளமிலங்கவே- ஏன்றி

ெரதியுமொன்றில்மதனனூசலிடுகுழைபொங்கவே-என்றுமெ
ழுதியமன்றில்நடமிடுகின்றசரணினர்வென்றிமலைக்குற.(வஞ்சி)
௨,ஆடுமிருகுழைதோடுமொருகுழற்காடுமிணைவிழிசாடவே-கோடு
பொருமுலைமூடுசலவையினூடுபிதுங்கிமாலாடவே-தோடிமுராளி
வராடிபயிரவிமோடிபெறவிசைபாடியேநீடுமலைமயிலாடு. மலை
மதிசூடுமலைதிரிகூடமலைக்குற (வஞ்சி)

குறத்தியைவர்ணித்தல்.

கொச்சகக்கலிப்பா,

முன்னங்கிரிவளைத்தமுக்கணர்குற்றாலர்வெற்பில்
கன்னங்கரியகுழற்காமக்குறவஞ்சி
பொன்னின்குடம்போற்புடைத்தெழுந்தபாரமுலை
யின்னம்பருத்திட்டாலிடைபொறுக்கமாட்டாதே,

தரு-இராகம்-கோடி-ஆதிதாளம்.

பல்லவி.

வஞ்சிவந்தாள் மலைக்குறவஞ்சிவந்தாள்.

அநுபல்லவி.

வஞ்சிவந்தாள்திரிகூடரஞ்சிதமோகினிமுன்னே
மிஞ்சியவிரகநோய்க்குச் சஞ்சீவிமருந்துபோலே (வஞ்சி)

சரணங்கள்.

௧.மும்மையுலகெங்கும்வெல்லக்கொம்மைமுலையார்க்குநல்ல-செ
ம்மையாய்க்குறிகள்சொல்லஅம்மேயம்மேயென்றுமெல்ல(வஞ்)
௨,சோலையில்வசந்தகாலம்வாலகோகிலம்வந்தாற்போல
கோலமலைவில்லியார்குற்றாலமலைவாழுங்குற (வஞ்)
௩,மாத்திரைக்கோலது அன்னசாத்திரங்கண்பார்வைபன்னத்
தோத்திரவடிவமின்னபத்தமலர்க்கொடியென்ன (வஞ்)

வசந்தவல்லிகுறத்தியைக்கண்டுமலையைவினவுதல்,

ஆசிரியவிருத்தம்,

அந்தரதுந்துமிமுழங்கு நன்னகர்க்குற்றாலலிங்கரருளைப்பாடி, வந்தகுறவஞ்சிதன்னைவசந்தவல்லிகண்டுமனமகிழ்ச்சிகொண்டு, சந்தமுலைத்துவளுமிடைத்து வளநகைப்பவளவிதழ்த் தையலேயுன், சொந்தமலையெந்தமலையந்தமலை வளமெனக்குச்சொல்லென்றாளே.

குறத்திசொல்லல்,

இராகம்-புன்னாகவராளி-ஆதிதாளம்

கண்ணிகள்.

௧.வானரங்கள்கனிகொடுத்து மந்தியொடுகொஞ்சும்
மந்திசிந்துகனிகளுக்கு வான்கவிகள்கெஞ்சும்

உ,ஆனவர்கள்விழியெறிந்து வானவரையழைப்பார்
கமனசித்தர்வந்துவந்து காயசித்திவிளைப்பார்
௩,தேனருவித்திரையெழும்பி வானின்வழியொழுகும்
செங்கதிரோன்பரிக்காலுந் தேர்க்காலும்வழுக்கும்
௪. கூனலிளம்பிறைமுடித்த வேணியலங்காரர்
லத்திரிகூட மலையெங்கள்மலையே
௫,முழங்குதிரைப்புனலருவி கழங்கெனமுத்தாடும்
முத்தமெங்கும்பரந்துபெண்கள் சிற்றிலைக்கொண்டாடும்
௬.கிழங்குகிள்ளித்தேனெடுத்து வளம்பாடிநடிப்போம்
கிம்புரியின்கொம்பொடித்து வெம்புதினையொடிப்போம்
௭,செழுங்குரங்குதேமாவின் பழங்களைப்பந்தடிக்கும்
தேனலர்சண்பகவாசம் வானுலகம்வெடிக்கும்
௮,வழங்குகொடைமகராஜர் குறும்பலவிலீசர்
வளம்பெருகுந்திரிகூட மலையெங்கள்மலையே
௯,ஆடுமரவீனுமணி கோடிவெயிலெறிக்கும்
ஆம்புலியைக்கவளமென்று தும்பிவழிமறிக்கும்
௰ வேடுவர்கள்தினைவிளைக்கச் சாடுபுனந்தோறும்
விந்தையகில்குங்குமமுஞ் சந்தனமுந்நாறும்
௧௧,காடுதொறுமோடிவரை யாடுகுதிபாயும்
சாகமணுகாமலையில் மேகநிரைசாயும்
௧௨;நீடுபலாவீசர்கையி லாசகிரிவாசர்
நிலைதங்குந்திரிகூட மலையெங்கள்மலையே
௧௩,கயிலையெனும்வடமலைக்குத் தெற்குமலையம்மே
கனகமகமேருவென நிற்குமலையம்மே
௧௪,சயிலமலைதென்மலைக்கு வடக்குமலையம்மே
சகலமலையென்றனக்குள் ளடக்கமலையம்மே
௧௫,வயிரமுடன்மாணிக்கம் விளையுமலையம்மே
வானிரவிமுழைகள்தொறு நுழையுமலையம்மே
௧௬,துப்பினுமவர்விழிப்பாகி யகிலமெங்குந்தேடும்
துங்கர்திரிகூடமலை யெங்கள்மலையம்மே
௧௭,சொல்லிமலையெனக்கிளைய செல்லிமலையம்மே
கொழுநனுக்காணிமலை பழனிமலையம்மே
௧௮,எல்லுலவும்விந்தைமலை யெந்தைமலையம்மே
இமையமலையென்னுடைய தமயன்மலையம்மே
௧௯,சொல்லரியசாமிமலை மாமிமலையம்மே
தோழிமலைநாஞ்சிநாட்டு வேளிமலையம்மே
௨௰,சொல்லினங்கள்முழவுகொட்ட மயிலினங்களாடும்
திரிகூடமலையெங்கள் செல்வர்மலையம்மே

உக, ஒருகுலத்திற்பெண்கள்கொடோம் ஒருகுலத்திற்கொள்ளோம்
உறவுபிடித்தாலும்விடோங் குறவர்குலம்நாங்கள்
உஉ, வெருவிவருந்தினைப்புனத்திற் பெருமிருகம்விலக்கி
வேங்கையாய்வெயில்மறைத்த பாங்குதனைக்குறித்தே
உ௩, அருளிலஞ்சிவேலர்தமக் கொருபெண்ணைக்கொடுத்தோம்
ஆதினத்துமலைக்கெல்லாஞ் சீதனமாய்க்கொடுத்தோம்
உச, பரிதிமதிசூழ்மலையைத் துருவனுக்குக்கொடுத்தோம்
பரமர்திரிகூடமலை பழையமலையம்மே

வசந்தவல்லிகுறத்தியை-நாட்டுவளமும் நகர்வளமும் வினவுதல்,

விருத்தம்,

கேட்டுவளமுலைகாட்டுங்கொடியின்வளமிடைகாட்டுங்குடுஞ்சி பூத்த, காட்டுவளங்குழல்காட்டுமலை வளர்ந்தானீயுரைத்துக்காட்டு வானேன், தோட்டுவளம்புரிகாதர்திரிகூடமலைவளருந் தோகையே யுன், னாட்டுவளமெனக்குரைத்துக்குற்றாலத்தலவளமுநவிலுவாயே

குறத்திசொல்லுதல்,

இ-ம்-தேரகௌளம்-தாளம்-சாப்பு,

கண்ணிகள்,

க, சூரமாங்குயிற்சின்னங்காமத் துரைவைத்தான் துறவந்தானென் றூத, ஆரமாமுலைமின்னாரவாரவரல்குற்றேர்களகங்காரஞ்செய்யப் பாரமாமதிவென்குடைமிஞ்சப் பறக்குங்கிள்ளைப்பரிகள்மின் கொஞ்சத், தேரின்மாரன்வசந்தனுலாவுந்திருக்குற்றாலர்தென்னா ரியநாடே

, காரைசேர்த்தகுழலார்க்குநாணிக்கடலைச்சேர்ந்தகறுப்பானமே கம், சேர்ந்தமுலைக்கிணையாகுமலையைச் சேர்ந்துடலையொன்று வாங்கி, நீரைச்சேர்ந்தாரையம்பொடுநிலக்கொண்டலின்தேரோறி வெய்யோன், தேரைச்சூழ்ந்திடக்கார்காலம்வெல்லுந் திருக்குற் றாலர்தென்னாரியநாடே

௩, சூழமேதியிறங்குந்துறையிற்சொரியும்பாலைப் பருகியவாளைகள் கூழைவாசற்பலாவினிற்பாயக்கெழும்பலாக்கனிவழையிற்சாய வாழைசாய்ந்தொருதாழையிற்றாக்க வருவிருந்துக்குபகரிப்பா ர்போல, தாழைசோறிடதாழைகுறுத்திடுஞ்சந்திரசூடர்தென்னா ரியநாடே,

ச, அன்னலார்மொருகன்னைப்பழித்ததென்றுடவர்மண்ணின் மூடு ங்கரும்பு, துன்னிமீள்வளர்ந்துமடந்தையர்தோளைவென்றுசுடக மூத்ததீன்று, பின்னுமங்கவர்முரலைவென்றுபிரியுங்காலத்திற்பெ ண்மையைவெல்ல, கன்னல்வேளுக்குவில்லாக வோங்குங்கடவு ளாரியநாடெங்கணுமே,

௫. ஸர்க்கபூமிக்குமுன்புள்ளநாடு சகலதேவர்க்குமன்புள்ளநாடு, மு
க்கண்ணன்விளையாடியநாடுசகலதேவவர்க்குமன்புள்ளநாடு,இக்
கெல்லாம்வளர்ந்தோங்கியநாடுசிவந்துரோகமுநீங்கியநாடு, மை
க்கண்ணருள்குழல்வாய்மொருபாகர்வசந்தவாரியநாடெங்களுடே,

௬. அஞ்சுநூறுமகங்களுடைநாடுஅனேகக்கோடியுகங்கொண்டநாடு
கஞ்சயோனியுதிக்கின்றநாடுகமலவாணிதுதிக்கின்றநாடு
செஞ்சொன்மாமுனியேகியநாடு செங்கண்மால்சிவனாகியநாடு
வஞ்சிடாசர்திருகூடநாதர்வசந்தவாரியநாடெங்களுடே,

௭. மாதமூன்றுமழையுள்ளநாடுவருஷமூன்றுவிளைவுள்ளநாடு
வேதமூன்றும்பலாவுள்ளநாடு விசேஷமூன்றும்குலாவுள்ளநாடு
போதமூன்றுநலஞ்செய்யுநாடு புவலமூன்றுவலஞ்செய்யுநாடு
நாதமூன்றுருவானவர்குற்றாலர்நாதராரியநாடெங்களுடே

௮. நீங்கக்காண்பதுசேர்ந்தவர்பாவம்நெருங்கக்காண்பதுகன்னலிற்
செந்நெல், தூக்கக்காண்பதுயாம்பழக்கொத்துசுழலக்காண்பது
திந்தயிர்மத்து, வீங்கக்காண்பதுமங்கையர்கொங்கை வேடிக்கக்
காண்பதுகொல்லையின்முல்லை,ஏங்கக்காண்பதுமங்கலபேறிகை
யீசரரியநாடெங்களுடே,

௯. ஓடக்காண்பதுபூம்புனல்வெள்ளம்ஒடுங்கக்காண்பது யோகியரு
ள்ளம்,வாடக்காண்பதுமின்னார்மருங்குல்வருந்தக்காண்பது சூ
லுளைச்சங்கு,போடக்காண்பதுபூமியில்வித்து விலய்பக்காண்ப
துகிண்கிணிக்கொத்து,தேடக்காண்பது நல்லறங்கீர்த்திதிருக்குற்
றாலர்தென்னாரியனுடே,

குறத்தி தலமகிமைசொல்லுதல்,

விருத்தம்,

அரிகூடவயன்கூடமறைகூடதினந்தேடவரிதாய்நின்ற
திரிகூடப்பதியிருக்குந்திருநாட்டுவளமுரைக்கத்தெவிட்டாதம்மே
கரிகூடப்பிடிதிரியுஞ்சாரில்மேலொருவேடன்கைவில்லேந்தி
நரிகூடக்கைலைசென்றதிரிகூடத்தலமகிமைநவிலக்கேளே

இ-ம்-பிலஹரி தாளம் ஜம்பை,

கண்ணிகள்,

௧. ஞானிகளுமறியார்கள்சித்ரநதிமூல
நானறிந்தவகைகளிதுசொல்லக்கேளம்மே
மேன்மைபெருந்திரிகூடத்தேனருவித்துறைக்கே
வேவுமொருசிவ்லிங்கத்தேவரகசியமாய்
ஆனதுரையயனுரைத்தானுமறியாமல்
அருந்தவத்துக்காய்த்தேடித்திரிந்தலையுங்காலம்

மோனவானவர்க்கெங்கள்காணவர்கள்காட்டு
மூதுகங்கையாறுசிவமதுகங்கையாமே,
௨, சிவமதுகங்கையின்மகிமை புவனமெங்கும்புகழும்
செண்பகாடவித்துறையின்பண்புசொலக்கேளாய்
தவமுனிவர்கூட்டரவுமவரிருக்குங்கையுஞ்
சஞ்சீவிமுதலான்விஞ்சைமூலிகையும்
கவனசித்தராதியருமௌனயோகியருங்
காத்திருக்குங்கயிலாயவேற்றிருக்குமம்மே
நவநிதியும்விளையுமிடமவிடமதுகடந்தால்
நங்கைமார்குரவையொலிபொங்குமரகடலே,
௩, பொங்குகடல்திரிவேணிசங்கமெனச்செழிக்கும்
பொருந்துசித்ரநதித்துறையிற்பொன்னுமுத்துங்கொழிக்கும்
கங்கையெனநடவருவிதங்குமிந்திர்சாபம்
சலந்தாடக்கழிநீராய்த்தொலைந்தோடும்பாவம்
சங்கைவிதியிற்பரந்துசங்கினங்கள்மேயும்
தழைத்தமதியிற்சிகரமெங்குங்கொழுத்தகயல்பாயும்
கொங்கலர்செண்பகசோலைக்குழும்பலாவிசர்
குற்றாலத்திரிகூடத்தலமெங்கள்தலமே.
௪, மன்றுதனில்தெய்வமுரசென்றுமேன்முழங்கும்
வளமைபெறுஞ்சதுரயுகம்மகிமையெனவழங்கும்
நின்றமதகரிபூசையன்றுசெய்ததலமே
நிந்தனைசெய்புட்பதந்தன்வந்தனைசெய்தலமே
பன்றியொடுவேடன்வலஞ்சென்றதிந்தத்தலமே
பற்றுகப்பரமருணைகுற்றாலத்தலமே
வென்றிபெருந்தேவர்களுங்குன்றமாய்மரமாய்
மிருகமதாய்த்தவசிருக்கும்பெரியதலமம்மே.

வசந்தவல்லி கிளை வினவுதல்.

விருத்தம்.

தீர்த்தவிசேடமுந்தலத்தின்சிறந்தவிசேடமுமுரைத்தாய்திருக்குற்றால, மூர்த்திவிசேடந்தனையுமொழிதோறுநீயுரைத்தமுறையாற்கண்டேன், வார்த்தைவிசேடங்கள்கற்றமலைக்குறவஞ்சிக்கொடியேவருக்கைவாசர், கீர்த்திவிசேடமும்பெரியகிளைவிசேடத்தையுந்தெளித்துவாயே,

குறத்தி சொல்லுதல்,
இ-ம்-முகாரி ஏகதாளம்,
கண்ணிகள்.

க, குற்றாலத்தின் வளத்தைக்கூறக்கேளம்மே
குலம்பார்க்கில்தேவரிலும்பெரியகுலங்கண்டாய்
பெரியதாய்தந்தையையுற்றுநீகேட்கில்
பெண்கொடுத்தமலையரசன்றனைக்கேட்கவேண்டு
உற்றதொருபனிமலையின்கொற்றவேந்தனுக்கும்
உயர்மதுரைமாறனுக்குஞ்செயமருகர்கண்டாய்
வெற்றிபெறும்பாற்கடலிற்புற்றரவினுறங்கும்
வித்தகர்க்குக்கண்ணானமைத்துனர்காணம்மே

உ, ஆனைவாகனத்தரனைவானுலகிலிருந்தும்
ஆருவானத்தார்க்குந்தோகைவாகனற்கும்
தானையாற்றந்தைகாலெரிந்தமகனற்குத்
தருகாழிமகனார்க்குந்தகப்பனார்கண்டாய்
சேனைமகபதிவாசலானைபெரும்பிடிக்குந்
தேனின்றமலைச்சாரல்மானீன்றகொடிக்குங்
கானமலர்மேலுருக்குமோனவயனார்க்குங்
காமனார்தமக்குமிவர்மாமனாரம்மே

௩, பொன்னுலகிற்றேவருக்குமண்ணுலகத்தவருக்கும்
பூதலத்தின்முனிவருக்கும்பாதலத்துள்ளார்க்கும்
அன்னவடிவெடுத்தவற்கும்மேனவுருவானவற்கும்
அல்லார்க்குமுன்னுதித்தசெல்வர்காணம்மே
முன்னுதித்துவந்தவரைத்தமயனென்றுரைப்பார்
மொழிந்தாலுமொழியெலாம்பழுதில்லைகாணம்மே
தன்னகரிற்குற்றாலநாதர்கிளைவளத்தை
நானுரைப்பதரிதலகுதானுரைக்குமம்மே,

வசந்தவல்லி-வினவுதல்,
விருத்தம்.

நீர்வளர்பவமேனிநிமலர்குற்றாலநாதர்
கூர்வளம்பாடியாடுங்குறவஞ்சிக்கொடியேகேளாய்
கார்வளர்குழலார்க்கெல்லாங்கருதிநீவிருதாய்ச்சொல்லுஞ்
சீர்வளர்குறியின்மார்க்கந்தெரியவேசெப்புவாயே,

குறத்தி-சொல்லுதல்,
தரு இ-ம்-தோடி-ஆதிதாளம்,
பல்லவி,
வித்தார-மென்குறியம்மே மணி

அநுபல்லவி.

முத்தாரம்பூணுமுகிழ்முலைப்-பெண்ணே
வித்தாரமென்குறியம்மே,

சரணங்கள்,

க, வஞ்சிமலையொடு கொச்சி கொங்கு
மக்கராடந்துலுக்காண மெச்சி
செஞ்சிவடகாசி நீளம்-சிவனஞ்
சிங்களமீழம்கொழும்பு வங்காளம்
தஞ்சைசிராப்பள்ளிக் கோட்டை- தமிழ்ச்
சங்கமதுரைதென் மங்கலப்பேட்டை
மிஞ்சிகுறிசொல்லிப் பேருய்-திசை
வென்றுதான்பெற்றவிருதுகள் பாருய்(வித்தா)

உ, நன்னகர்க்குற்ருலந்தனினில் எங்கும்
நாட்டுமெண்ணூற்றெண்பத்தேழாண்டுதன்னில்
பன்னகமாமுனி போற்றத்-தமிழ்ப்
பாண்டியனூர்முதற்சிற்றேடுமேய்ந்த
தென்னுருஞ்சித்ர சபையை-எங்கள்
சின்னணஞ்சாத்தேவன்செப்பொடுமேய்ந்த
மூன்ருளிலேகுறி சொல்லிப் பெற்ற
மொகனமாலைதார்மோகன வல்லி(வித்தார)

ஈ, அன்பாய்வடகுண பாலில்-கொல்லத்
தாண்டொருநானூற்றிருபத்து நாலில்
தென்காசியாலய மொங்கக்-குறி
செண்பகமாநர்க்குச்சொன்னபேர் நாங்கள்
நண்பாண்டியராச்சிய முய்ய-சொக்க
நாயகர்வந்துமணக்கோலஞ் செய்ய
இன்பமதுரை மீனுட்சி
யெங்களைக்கேட்டதுஞ்சங்கத்தார் (வித்தார)

வசந்தவல்லி- குறிகேட்குதல்,

விருத்தம்,

கலவிக்குவிழிவாள்கொண்டுகாமனைச்சிங்கிகொள்வாய்
குலவித்தைகுறியேயானுற்குறவஞ்சிகுறவைப்பாயோ
பவவுக்குள்கனியாய்நின்றபரமர்குற்ருலநாட்டில்
இலவுக்குஞ்சிவந்தவாயாளெனக்கொருகுறிசொல்வாயே,

குறத்தி-சொல்லல்,

இ-ம்-அடாணு-ஆதிதாளம்,

கண்ணிகள்,

க, என்னகுறியாகிலுநான்சொல்லுவே னம்மே-சது

ரோறுவேனெதிர்த்தபேனாவெல்லுவே னம்மே
௨. மன்னியர்கள்மெச்சுகுறவஞ்சிநா னம்மே என்றன்
வயிற்றுக்கித்தனைபோதங்கஞ்சிவ ரம்மே
௩. பின்னமன்றிக்கூழெனினுங்கொண்டுவா வம்மே-வந்தால்
பெரியகுடுக்கைமட்டமண்டுமே னம்மே
௪, தின்னவிலையும்பிளவுமள்ளித்தா வம்மே-கப்பல்
சீனச்சரக்குத்துக்கிணிகிள்ளித்தா வம்மே
௫.அம்மேயம்மேசொல்லவாராய்வெள்ளச்சியம்மேயம்மே-உனக்
காக்கம்வருகுதுபாராய்வெள்ளச்சி யம்மே
௬.விம்முமுலைக்கன்னிசொன்னபேச்சுநன் றம்மே-நேரே
மேல்புறத்திலாந்தையிட்டவீச்சுநன் றம்மே
௭. தும்மலுங்காகமுமிடஞ்சொல்லுதே யம்மே-சரம்
குட்சமாகப்பூரணத்தைவெல்லுதே யம்மே
௮, செய்மையிதுநன்னிமித்தங்கண்டுபா ரம்மே திரி
கூடமலைத்தெய்வமுனக்குண்டுபா ரம்மே

இதுவும்-குறத்திசொல்லுதல்.

விருத்தம்,

பல்லியும்பலபலென்னப்பகருதுதிரிகூடத்திற்
கல்விமான்சிவப்பின்மிக்கான்கருத்தின்மேன்மறுவுமுள்ளான்
நல்லமேன்குலத்தானிந்தநன்னகர்த்தலத்தானுக
வல்லியேயுனக்குநல்லமாப்பிள்ளை வருவானம்மே,

இதுவுங்-குறத்திசொல்லுவது.

ஸ்ரீராகம்- அடதாளசாப்பு,

கண்ணிகள்.

௧, தரைமெழுகுகோலமிடுமுறைபெறவேகணபதிவையம்மே குட
தாங்காமுப்பழம்படைப்பாய்தேங்காயுமுடைத்துவைப்பாயம்
மே,
௨. அறுகுபுனல் விளக்கிடுவாய்டைக்காய்வெள்ளிலைகொடுவாவம்
மேவடை- அப்பமவல்வர்க்கவகைசர்க்கரைவையொப்பொரிவை
யம்மே,
௩, நிரைநாழியளந்துவைப்பாயிறையோனைக்கரங்குவிப்பாயம்மே
குறிநிலவரத்தைத்தேர்ந்துகொள்வாய்குலதெய்வத்தை நேர்ந்து
கொள்வாயம்மே,
௪,குறிசொல்லவா குறிசொல்லவாபிறைநுதலேகுறிசொல்லவாவம்
மேஐயர்-குறும்பலவர்தெருவுளத்தாற்பெரும்பலனுங்குறிசொல்
லவாயம்மே,

குறத்திசொல்லுதல்,
கட்டளைக்கலித்துறை,

ஆனேறுசெல்வர்திரிகூடநாதரணிநகர்வாழ்
மானேவசந்தபசுங்கொடியேவந்தவேளைநன்றே
தானேயிருந்ததமுதன்றேசெழுந்தாமரைப்பொற்
கானேறுகைம்பலகாட்டாய்மனக்குறிகாட்டுதற்கே

இ-ம்-கல்யாணி-சாப்புதாளம்
கண்ணிகள்,

௧, முத்திரமோதிரமிட்டகையைக்காட்டாயம்மே
முன்கைமுதாரியிட்டகையைக்காட்டாய்
௨, அத்தகடகம்புனைந்தகையைக்காட்டாய்-பொன்னி
னலங்காரநெளியிட்டகையைக்காட்டாய்
௩, சித்திரகுடகமிட்டகையைக்காட்டாய்-பசுஞ்
செங்கைமலர்ச்சங்கரேகையைக்காட்டாய்
௪, சத்திபீடத்திறைவர்நன்னகர்க்குள்ளே-வந்த
சஞ்சீவியேயுனதுகையைக்காட்டாய்

கொச்சகக்கலிப்பா-

ஏழைபங்கர்செங்கைமழுவேற்றவர்குற்றாலர்வெற்பில்
வாழிகொண்டமோக வசந்தவல்லிகைப்பார்த்து
விழிகொண்டுசெங்கனிவாய் மிக்ககுறவஞ்சிபழங்
கூழையுண்டவாயாற் குறியைவிண்டுசொல்வாளே.

குறத்திசொல்லுதல்,
இ ம்-பைரவி-ரூபகதாளம்.
கண்ணிகள்.

௧. மாறுமலிருநிலத்தி	லறம்வளர்க்குங்கையே
மனைமறத்தாலறம்பெருக்கித்	திறம்வளர்க்குங்கையே
௨. விறுகநவநிதியம்	விளையுமிந்தக்கையே
மேன்மேலும்பாலமுத	மளையுமிந்தக்கையே
௩,ஆறுதசனங்கள்பசி	யாற்றுமிந்தக்கையே
அணங்கனையார்வணங்கிநிதம்	போற்றுமிந்தக்கையே
௪.பேறுகநன்னகரங்	காக்குமிந்தக்கையே
பிறவாதநெறியார்க்கே	யேற்குமிந்தக்கையே

குறத்திதெய்வம்பரவல்.
விருத்தம்.

கைக்குறிபார்க்கிலிந்தக் கைப்பிடிப்பவர்தாமெட்டுத்
திக்குமேயுடையராவர் ஜெகமகராசிநீயே
இக்குறிபொய்யாதென்றே யிறையவர்திரிகூடத்தில்
மெய்க்குறவஞ்சிதெய்வம் வியப்புறவணங்குவாளே.

ஆசிரியப்பா.

குழல்மொழியிடத்தார்குறும்பலாவுடையார்
அழகுசந்நிதிவாழம்பலவிநாயகர்
செந்தில்வாழ்முருகாசெங்கண்மால்மருகா
கந்தனேயிலஞ்சிக்கடவுளேசரணம்
புள்ளிமானீன்றபூவையேகுறக்குல
வள்ளிநாயகியேவந்தெனக்குதவாய்
அப்பனேமேலவாசலரசே
செப்பருமலைமேற்றெய்வகன்னியர்காள்
ஆரியங்காவரவருட்சொரிமுத்தே
நேரியகுளத்தூர்நின்றசேவகனே
கோலமாராணிகுற்றாலநங்காய்
காலவைரவாகனதுடிகறுப்பா
முன்னடிமுருகாவன்னியராயா
மன்னியபுலிபோல்வரும்பன்றிமாடா
எக்கலாதேவிதுர்க்கைபிடாரி
மிக்கதோர்குறியாய்வேண்டினனுங்களை
வந்துமுன்னிருந்துவசந்தமோகினிப்பெண்
சிந்தையில்நினைத்ததுசிவனோகாதுவோ
சலவையோபட்டோதவசதானியமோ
சலவையோபுழுகோகளபகஸ்தூரியோ
வட்டிலோசெம்போவயிரமுத்தோ
கட்டிலோமெத்தையோகட்டிவிராகனோ
வைப்பொடுசெப்போவரத்தொடுசெல்வோ
கைப்படுதிரவியங்களவுபோனதுவோ
மறுவிலாப்பெண்மயல்வருந்திருஷ்டிதோஷமோ
திரிகண்ணரானவர்செய்தகைமயக்கமோ
மன்னர்தாமிவள்மேல்மயல்சொல்லிவிட்டதோ
கன்னிதானொருவர்மேற்காமித்தகுறியோ
சேலையும்வளையுஞ்சிந்தினதியக்கமோ
மாலையுமணமும்வரப்பெறுங்குறியோ
இத்தனைகுறிகளிலிவள்குறியிதுவென
வைத்ததோர்குறியைவகுத்தருள்வீரோ.

குறத்திசொல்-விருத்தம்.

கடித்திடுமரவம்பூண்டகருத்தர்குற்றாலர்நேயம்
பிடிக்குதுகருத்துநன்றாய்ப்பேசுதுசக்கதேவி
அடிக்குதென்னுதடுநாவுஞ்சொல்லுசொல்லென்னவாயில்
இடிக்குதுகுறளியம்மேயினிக்குறிசொல்லக்கேளே,

குறத்திசொல்லுதல்.
இ-ம்-பிலஹரி-சாப்புதாளம்,
கண்ணிகள்.

௧. சொல்லக்கேளாய்குறிசொல்லக்கேளா யம்மே
தோகையர்க்கரசேகுறிசொல்லக்கேளாய்
௨, முல்லைப்பூங்குழலாளேநன்னகரில்வாழ்முத்து
மோகனப்பசுங்கிளியேசொல்லக்கேளாய்
௩, பல்லக்கேறுந்தெருவிலானைநடத்திமணிப்
பணியாபரணம்பூண்டபார்த்திபன்வந்தான்
௪, செல்வப்பூங்கோதையேநீபந்தடிக்கை-யிலவன்
சேனைகண்டவெருட்சிபோல்காணுதேயம்மே

வசந்தவல்லிசொல்லுதல்.
இராகம்-பந்துவராளி-தாளம்-திரிபுடை.
கண்ணிகள்,

௧, நன்றுநன்றுகுறவஞ்சிநாடகக்காரி இந்த
நாட்டானபேர்க்கானவார்த்தைநானறியேனோ
௨, ஒன்றுபோடாதேகுறிசொல்லியேவந்தாய் பின்னை
யழப்பிப்போட்டாய்குறியுங்குழப்பிப்போட்டாய்
௩, மன்றில்வருஞ்சேனைதன்னைக்கண்டுபயந்தால்-இந்த
மையலுங்கிறுகிறுப்புந்தையலார்க்குண்டோ
௪, இன்றுவனாயேகுளிருங்காய்ச்சலுமுண்டோ-பின்னை
யெந்தவுளைகையென்றுகுறிகண்டுசொல்லடி.

குறத்திசொல்லுதல் கண்ணிகள்,

௧, வாகனத்திலேறிவரும்யோகபுருஷன்-அவன்
வங்காரப்பவனியரவைபெண்களுக்குள்ளே
௨, தோகைநீயவனைக்கண்டுமோகித்தாயம்மே அது
சொல்லப்பயந்தேனிருந்தேன்சொல்லுவேன்முன்னே
௩, காகமணுகாததிரிகூடமலைக்கே உன்மேல்
காய்ச்சலல்லகாய்ச்சலல்லகாமக்காய்ச்சல்காண்
௪, மோகினியேயுன்னுடற்கிறுகிறுப்பெல்லாம்-அதன்
மோகக்கிறுகிறுப்பேடிமோகனக்கள்ளி

வசந்தவல்லி-சொல்லுதல்-கண்ணிகள்,

௧, கன்னியென்றுநானிருக்கநன்னகர்க்குள்ளே-என்னைக்
காமியென்றாய்குறவஞ்சிவாய்மதியாமல்
௨, சன்னையாகச்சொன்னன்குறிசாதிப்பையானால்-அவன்
தாருஞ்சொல்லிப்பேருஞ்சொல்லியூருஞ்சொல்லடி.

குறத்திசொல்லுதல் கண்ணிகள்,

௧, உன்னைப்போலெனக்கவனைநிமுகமோ-அவன்
ஊரும்பேருஞ்சொல்லுவதற்குதிமுகமோ
௨, பின்னையுந்தானுனக்காகச்சொல்லுவேனம்மே அவன்
பெண்சேரவல்லவன்காண்பெண்கட்கரசே,

வசந்தவல்லி சொல்லுதல் கண்ணிகள்,

௧, வண்மையோவாய்மதமோவித்தைமதமோ-என்முன்
மதியாமல்பெண்சேரவல்லவனென்றாய்
௨, கண்மயக்கால்மயங்காதேயுண்மைசொல்லடி. பெருங்
கானமலைக்குறவஞ்சிக்கன்னிமயிலே

குறத்திசொல்லுதல் கண்ணிகள்,

௧, பெண்ணரசேபெண்ணென்றால்திரியுமோக்கு ஒரு
பெண்ணுடனேசேரவென்றால்கூடுமோக்கு
௨, திண்ணமாகவல்லவனும்நாதனுமோக்கு பேரைத்
திரிகூடநாதனென்றேசெப்பலாமம்மே

கவிக்கூற்று.

மன்னர்திரிகூடநாதனென்னும்போதிலே முகம்
மாணிக்கவசந்தவல்லிநாணிக்கவிழ்ந்தாள்,

குறத்திசொல்லுதல்-கண்ணிகள்,

௧, நன்னகரிலீசருன்னைமேவவேவாரார் இந்த
நாணமெல்லாம்நானேநானுங்காணவேபோறேன்
௨, கைநொடியிற்பொன்னிதழிமாலைவருங்கா-ணிவிற்
கக்கத்திலிடுக்குவாயுன்வெட்கத்தையம்மே
௩, என்னுமொருகுறவஞ்சிதன்னையழைத்தே
கிட்டுசருவாபரணம்பூட்டினளே,

சிங்கன்வருதல் விருத்தம்.

பாமாலைதிரிகூடப்பரமரருள்கெறவசந்தப்பாவைகூந்தற்
பூமாலையிதழிபெறபொன்மாலைமணிமாலைபொலிவாய்ப்பூண்டு
நாமாலைக்குறவஞ்சிநன்னகர்பட்டணமுழுதுநடக்குநாளில்
மாமாலைபூண்டசிங்கவங்கணச்சிங்கியைத்தேடிவருகின்றனே,

இதுவுமது-விருத்தம்.

வக்காவின்மணிபூண்டுகொக்கிறகுசிகைமுடித்தவரித்தோற்க
ச்சை, தொக்காகவிரித்திறுக்கித்தொடர்புலியைவண்டுறக்கித் தூணி
தூக்கித், கைக்கானவாயுதங்கள்கொண்டுவில்லிக்கோலெடுத்துக்கண்
ணிசேர்த்தூத் திக்கடங்காக்குறவசிங்கன்குற்றாலத்திரிகூடச் சிங்க
ன்வந்தான்.

இதுவுமது-விருத்தம்,

வக்காவின்மணிசூடிவகைக்காரிசிங்கிவரும்வழியைத்தேடி, மிக்கானபுலிகரடி கிடுகிடெனநடுநடுங்கவெறித்துநோக்கிக், கக்கானவென்றேலயிடுங்குருவி கொக்குக்கேற்ற கண்ணிகையில்வாங்கி, தொக்காகநடைநடந்துதிரிகூடமலைக்குறவன்தோன்றினனே,

இராகம்-அடாணாசாப்புதாளம்,

கண்ணிகள்,

கொக்கிறகுசூடிக்கொண்டுகுருவிவேட்டையாடிக்கொண்டு [டு
வக்காவின்மணிபூட்டிக்கொண்டு மடவார்கண்போலீட்டிக்கொண்
கொக்காய்கச்சையிறுக்கிக்கொண்டுதுள்ளுமீசைமுறுக்கிக்கொண்டு
திக்கடங்காக்குளுவசிங்கன்திரிகூடசிங்கன்வந்தான்,

சிங்கன்சொல்லுதல்,

விருத்தம்,

ஆளிபோற்பாரந்தச்சரும்பிகைகேட்குந் திருகூடத்தமலர்நாட்டினி, வேலைதொருபுகுந்துதிருவிளையாட்டங் கண்ணிகத்திவேட்டையாடி, ஞாளிபோற்சுவடெடுத்துப்பூனைபோலொளிபோட்டுநரிபோற்பம்மிக், கூளிபோற்றொடர்ந்தடிக்குந்திரிகூட பெரியசிங்கக்குளுவனானே,

இராகம் தனியாசி- ஆதிதாளம்.

கண்ணிகள்,

௧, தேவருக்கரியார்மூவயற்பெரியார்சித்திரசபையார்சித்திரநதிசூழ், கோவிலிற்புரவில்காவலிலடங்காகுருவிகள்படுக்குங்குளுவனானே;

௨, காதலஞ்செழுத்தாற்போகநீறணியார்- கைந்நரம்பெடுத்துக்கின்னரந்தொடுத்துப் பாதகாதோலாலபலதவிலடித்துப்-பறவைகள் படுக்குங்குறவனும்நானே.

௩, தலைதனிற்பிறையார்பலவினிலுறைவார்கசையினைவணங்கார் சிதைதனைபிடித்தே-பலமயிர்நறுக்கிச்சிலகண்ணியிறுக்கிப் பறவைகள்படுக்குங்குளுவனும்நானே,

௪, ஒருகுழைச்சங்கம்ஏருகுழைத்தங்கம்.உதியவிநோதர் திரிகூடநாதர், திருநாமம்போற்றித்திருநீறுசாற்றித்-திரிகூடநாமச்சிங்கனும் நானே,

நூவன்வருதல்-விருத்தம்,

புலியொடுபுலியைத்தாக்கிப்போர்மதயானைச்சாய்க்கும்
வலியவர்திரிகூடத்தில்மதப்புலிசிங்கன்முன்னே
கலிகளுங்கலைதயும்பெசிக்கையிலேயெட்டிவாங்கி
எலிசலைத்துரத்தும்வீரனிப்புலி நூவன்வந்தான்

இராகம் அடாணா-சாப்புதாளம்-கண்ணிகள்,

௧, வடக்குருவிக்குத்தன்னியுங்கொண்டு - உள்ளான்படுத்ததுமெ ண்ணிக்கொண்டு மார்க்கமெல்லாபலபேசிக்கொண்டு-கோட்கார நூவனும்வந்தானே.

௨, கருக்குருவிக்குக்கண்ணியுங்கொண்டு- கானுங்கோழிக்குப்பொ ரியுங்கொண்டு-வரிச்சிலைக்குருவரிற்கவுண்டன் வாய்ப்பானநூவ னும்வந்தானே,

௩, ஏகனைநாகனைக்கூவிக்கொண்டுஎலியானைபுலியானையேவிக்கொண் டு,கானசிங்கனைமேவிக்கொண்டு வங்காரநூவனும்வந்தானே.

௪, கொட்டைகைத்தூண்போலக்காலிலங்க-ஒட்டகம்போலேமெனி லங்க-கட்டானதிரிகூடச்சிங்கன்-மட்டிவாய் நூவனும்தானே,

சிங்கன்-பட்சிகளைப்பார்த்தல்- விருத்தம்,

மூவகைமதிலுஞ்சாயமூரலால்வீறுசெய்த
சேவகர்திருக்குற்றாலர்திருவிளையாட்டந்தன்னில்
பாவகமாகநூவன்பறவைபோற்பறவைகூவி
மாவின்மேலேறிச்சிங்கன்வரும்படிபார்க்கின்றானே

தரு இராகம் கல்யாணி-ஆதிதாளம்,

பல்லவி,

வருகினுமையே-பறவைகள்-வருகினுமையே.

அநுபல்லவி.

வருகினுமையேதிரிகூடநாயகர்
வாட்டமில்லாப்பண்ணைப்பாட்டபுரமெல்லாம்
குருகுநாரையுமன்னமுந்தாராவும்
கூழைக்கிடாக்களுஞ்செங்கால்நாரையும், (வருகினு)

சரணங்கள்,

௧, சென்னியிலேபுனற்கன்னியைவைத்த
திரிகூடநாதர்கிரிமாதுவேட்கையில்
மன்னனொருவன்வரிசையிட்டான்கங்கை
மங்கைக்குநானும்வரிசைசெய்வேனென
அன்னதயாவுடையாகாசகங்கை
யடிக்கனைக்காணப்புறப்படுநேத்திபோல்
பொன்னிறவானெக்குத்தன்னிறமாகப்
புரிந்தபுவனந்திரிந்துகுருகினம். (வருகினு)

௨, காடைவருகுதுகம்புகள்வருகுது
    காக்கைவருகுதுகொண்டக்கிலாத்தியும்
மாடப்புறாவுமயிலும்வருகுது
    மற்றொருசாரியாய்க்கொக்குத்திரளெல்லாம்
கூடலையுள்ளாக்கிச்சைவம்புறமாக்கிக்
    கூடுஞ்சமணரைதீங்கழுவேற்ற
எட்டதிரோற்றியசம்பந்தமூர்த்திகன்
    றிட்டதிருமுத்தின்பந்தல்வந்தாற்போலே, (வருகினு)

௩, வெள்ளைப்புறாவுஞ்சகோரமுமாந்தையும்
    மின்கொத்திப்புள்ளுமாங்கொத்திப்பட்சியும்
இள்ளையும்பஞ்சவர்ணக்கிளிகூட்டமுங்
    கேகயப்பட்சியும்நாகணவாய்ச்சியும்
உள்ளானுஞ்சிட்டும்வலியானுமன்றிலும்
    ஓலஞ்செய்தேகூடிநாலஞ்சுதோற்றமாம்
துள்ளாடுஞ்குலசபாலம்பிராட்டியார்
    தொட்டாடுமைவர்ணப்பட்டாடைபோலவே (வருகினு)

சிங்கன் சொல்.

கொச்சகக்கலிப்பா,

ஈராயிரங்கரத்தானேற்றசங்குநான்மறையும்
சீராயிரங்கநடஞ்செய்தவர்குற்றாலவெற்பில்
பாராய்பலமுகமும்பட்சிநிரைசாயுதையே
ஓராயிரமுகமும்பட்சிநிரைசாயுதையே

தரு-இராகம் கல்யாணி-ஆதிதாளம்,

பல்லவி,

சாயினுமையே பறவைகள்-சாயினுமையே,

அநுபல்லவி,

சாயினுமையேபாயும்பறவைகள்
    சந்தனக்காட்டுக்குஞ்சண்பகக்காவுக்கும்
கோயிற்குழல்வாய்மொழிமங்கைப்பேருக்குங்
    குற்றாலநாயகர்சிற்றாற்றுவெள்ளம்போல் (சாயினு)

சரணங்கள்,

௧, காராருஞ்செங்குளமேலப்பாட்டுபற்றுக்
    காடுவெட்டிப்பற்றுநீடுசுண்டைப்பற்று
சீராரும்பேட்டைக்குளப்போடைக்காங்கேயன்
    ஸ்ரீகிருஷ்ணன்மேடுமுனிக்குருகன்பேரி

வரிவாய்சிவலப்பேரிவடகா
விராசகுலராமன்கண்டுகொண்டான்மேலை
மாரிப்பற்றுங்கீழைமாரிப்பற்றுன்சன
னேரிப்பற்றுஞ்சாத்தனேரிப்பற்றுஞ்சுற்றி (சாமினு)

௨, பாறைக்குளந்தெற்குமேல்வழுதிக்குளம்
பாட்டப்பெருங்குளஞ்செங்குறிஞ்சிக்குளம்
ஊருணிப்பற்றுந்திருப்பணிநீள
முயர்ந்தபுளியங்குளந்துவணாங்குளம்
மாறனேரிக்குளமளத்தளம்பாறை
வழிமறித்தான்குளமாலடிபற்றும்
ஆணிக்குற்றாலர்தோட்டச்செய்நெடுஞ்செ
யபிஷேகப்பேரிக்கணக்கன்பற்றிலுஞ் (சாமினு)

௩, ஐயர்குற்றாலத்தநம்பியார்திருத்து
மப்பாலொருதானகுற்றாலப்பேரி
செய்யும்புலியூரிலஞ்சிமேலகரஞ்
செங்கோட்டைசிவலநல்லூர்சிற்றம்பலஞ்
துய்யகுன்றகுடிவாழவல்லான்குடி
சுரண்டையூர்முதலுட்கிடைசுற்றியே
கொய்யுமலர்தாரிலஞ்சிக்குமரர்
குருவிளையாடுந்திருவிளையாட்டத்தில் (சாமினு)

சிங்கன்சொல்,

கொச்சகக்கலிப்பா,

கொட்டழகுகூத்துடையார்குற்றாலநாதர்வெற்பில்
நெட்டழகுவாள்விழியும்நெற்றியின்மேற்கஸ்தூரிப்
பொட்டழகுங்கரத்தழகும்பொன்னழகுமாய்நடந்த
கட்டழகிதன்னழகென்கண்ணளவுங்கொள்ளாதே,

தரு இராம்-கல்யாணி ஆதிதாளம்

பல்லவி.

மேயினுமையே-பறவைகள்-மேயினுமையே

அநுபல்லவி,

மேயினுமையேகுற்றாலநாதர்வியன்குலசேகரப்பட்டிக்குளங்களும்,ஆயிரப்பேரியுந்தென்காசியுஞ்சுற்றியயினாயுந்தேளியுமாராலுங்கொத்தியே.

சரணங்கள்,

௧, ஆலயஞ்சூழத்திருப்பணியுங்கட்டியன்ன சத்ரங்கட்டியப்பாலுந்தென்காசிப்- பாலமுகங்கட்டிப்படித்தரஞ்சேர்கட்டிப்பத்தசு

௫

னங்களைக்காக்கத்துசங்கட்டி-மாலயன்போற்றிய குற்றாலநாதர்க்
குவழித்தொண்டுசெய்திடக்கச்சைகட்டிக்கொண்ட - சிலன்கிளு
வையில்சின்னஞ்சேந்திரன்சிறுகாலசந்திதிருத்துப்புரவெல்லாம்
௨, தானைத்தலைவன்வயித்தியப்பன்பெற்றசைவக்கொழுந்துதருமத்
துக்காலயஞ் சேனைச்சவரிப்பெருமாள்சகோதரன்செல்வன்மரு
தூர்வயித்தியப்பனுடன்- மானவன் குற்றாலநாதனைப்பெற்றவன்
வள்ளலெனும்பிச்சைப்பிள்ளைப் திருத்தெல்லாங்கானக்குளத்து
ள்வாய்க்கிழைப்புதுக்குளங்கற்பூரகாற்பற்றுந்தட்டான் குளஞ்சு
ற்றும், (மேயினு)
௩, மன்னன் கிளுவையிற்சின்னணஞ்சேந்திரன்வடகரைவீட்டுக்கு
மந்திரியாகவும்-செந்நெல் மருதூர்க்குநாயகமாகவுந்தென்காசியூ
ருக்குத்தாயகமாகவும் தன்னைவளர்க்கின்றகுற்றாலநாதர்தலத்தை
வளர்க்கின்றதானிகனாகவும்- நன்னகர்குற்றாலத்தந்தாதிசொன்ன
வன்நண்ணூர்தொழும்பிச்சைப்பிள்ளைத்திருத்தெல்லாம். (மேயி)
௪, நன்னகரூர்கட்குச்சாலைமடங்கட்டிநாயகர்கோவிற்கொலுமண்
டபங்கட்டிதென்னமரம்மானந்தத்தோப்பிட்டுத்தெப்பக்குளங்
கட்டித்தேர்மண்டபங்கட்டிப்-பன்னுந்திரிகூடத்தம்பலங்கட்டி
ப்பசுப்பிரைகோடித்திருப்பணியுங்கட்டி - யந்நாளில்தர்மக்கள
ஞ்சியங்கட்டுமனந்தபத்தநாபன்கட்டளைப்பற்றெலாம். (மேயி)
௫, தந்தைமுன்கட்டினவம்பலத்துக்குந்தன்மத்துக்கும் நிலைக்கண்
டிபோலவேளந்தையார்வாசலிற்பிள்ளையார்செய்வித்திரண்டுறை
குறிஞ்சிப்படித்துறையுஞ்செய்த - கொந்தார்புயத்தானிராக்கத
ப்பெருமாள்குற்றாலநாதன்முன்னுற்றசகோதரன்-வந்தனைசேர்
சங்குமுத்துதன்மைத்துனன் மன்னன்வயித்தியநாதன் திருத்தெ
ல்லாம், (மேயினு)
௬, ஆர்மேல்வருகின்ற துன்பமுநீக்கி யடங்கார்குறும்புமடக்கியே
தென்காசியூர்மேலுயர்த்தமனுநீதிநாட்டியுடையவர் குற்றாலர்பூ
சைநைவேத்தியம் தேர்மேற்றிருநாளுந்தெப்பத்திருநாளுஞ்சித்
திரமண்டபஞ்சத்திரசாலையும்-பார்மேல்வளஞ்செயனந்தபத்ம
நாபன்வயித்தியநாதன்திருத்தெல்லாம். (மேயினு)
௭. ஆறையழக்கப்பூபாலன்கட்டளையன்பன்திருமலைக்கொழுந்துத
ன்கட்டளை - நாறம்புகுற்றாலச்சங்குதன்கட்டளை நங்கொளல்லா
ரரிநரபாலன்கட்டளை - வீறுசேர்பால்வண்ணச்சங்குதன்கட்ட
ளைமிக்கானவேமனூர்கிருஷ்ணன்வனிகேசன். பேறுடையன்ப
ன்வருசங்குமுத்துதன்பேரானகட்டளைச்சீரானபற்றெல்லாம். (
௮. தானிகன்சர்க்கரைப்பண்டாரமென்னுந்தணியாதகாதற் பணிவி
டைசெய்கின்ற மேன்மைபெறுஞ்சுந்தரத்தோழன்கட்டளைமிக்
ககருவைப்பதிராமநாயகன்-நானிலமும்புகழ்தாகந் தீர்த்தானுட

லல்லூர்வருசங்காமூர்த்திகட்டளை - ஆனசண்டைத்தம்பிரான்
சைகட்டளையப்பால்மலைநாட்டார்கட்டளைப்பற்றெல்லாம்(மே)
சிங்கன்சொல் கொச்சகக்கலிப்பா.

செட்டிக்கிரங்கிவினைதீர்த்தவர்குற்றாலர்வெற்பில்
கட்டிச்சிணுங்குறுதற்சுந்தரியாள்கொங்கையின்மேல்
முட்டிக்கிடந்துகொஞ்சிமுத்தாடிக்கூடிநன்றாய்க்
கட்டிக்கிடக்குமுலைக்கச்சாய்க்கிடந்திலனே,

தரு இராகம்-கல்யாணி-தாளம்-சாப்பு.

பல்லவி.

கண்ணிகொண்டுவாடா-குளுவா-கண்ணிகொண்டுவாடா,

அநுபல்லவி,

கண்ணிகொண்டுவாடாபண்ணவர்குற்றாலர்
காரார்திரிகூடச்சாரலிலேவந்து
பண்ணியபுண்ணியமேறினாற்போலே
பறவைகளெல்லாம்பறந்தேறிமேயுது (கண்ணி)

சரணங்கள்.

க மானவர்குழுமதுரையிற்பாண்டியன்
மந்திரியார்கையின்முந்திப்பணம்போட்டுத்
தானாசைப்பட்டுமுன்கொண்டகொக்கெல்லாந்
தரிகொண்டதில்லைநரிகொண்டுபோச்சுது
கானவர்வேடத்தையினமென்றெண்ணாதே
காக்கைபடுத்தகருமுகில்வண்ணனும்
மேனாட்படுத்திட்டகொக்கிறகின்னும்
விடைமேலிருப்பார்சடைமேலிருக்குது (கண்ணி)

உ. முன்னாள்படுத்தபரும்பெருச்சாளியை
மூத்தநயினார்மொடுவாய்க்கொடுபோனார்
பின்னானதம்பியாராடுமயிலையும்
பிள்ளைக்குறும்பாற்பிடித்துக்கொண்டேகினார்
பன்னருமன்னத்தைநன்னகரீசர்
பரிகலமீந்திடும்பார்ப்பானுக்கீந்தனர்
வன்னபருந்தொருகள்வன்கொடுபோனான்
வக்காவுநாரையுங்கொக்கும்படுக்கவே (கண்ணி)

ங. மீறுமிலஞ்சிக்குறத்தியைக்கொண்டசெவ்
வேட்குறவன்முதல்வேட்டைக்குப்போனநாள்
ஆறுநாட்கூடியொருகொக்குபட்ட

நகப்பட்டகொக்கையவித்தொருசட்டியில்
சாருகலவைத்தபின்வேதப்பிராமணர்
தாமுங்கொண்டார்சைவர்தாமுங்கொண்டார்தவப்
பேருமுனிவருமேற்றுக்கொண்டாரினிப்
பிக்குச்சொல்லாமலேகொக்குப்படுக்கவே (கண்ணி)

கவிக்கூற்று-கொச்சகக்கலிப்பா,

ஆனைகுத்திச்சாய்த்ததிறலாளர்திருக்குற்றாலர்
கூனிகொத்திமுக்கிவிக்கிக்கொக்கிருக்கும்பண்ணையெல்லாஞ்
சேனைபெற்றவாட்காரச்சிங்கனுக்குக்கண்ணிகொண்டு
பூனைகுத்திநூவன்முழுப்பூனையைப்போல்வந்தானே,

நூவன்-சொல்லுதல்,

இராகம் காம்போதி சாப்புதாளம்,

கண்ணிகள்,

[illegible]லந்தகண்ணியைநெருங்கிக்குத்தினால்காக்காயும்படுமே-குளுவா
காக்காயும்படுமே
மலர்ந்தகண்ணியைக்கவிழ்த்துக்குத்தினால்வக்காவும்படுமே-குளுவா
வக்காவும்படுமே
உலர்ந்தகண்ணியையிறுக்கிக்குத்தினாலுள்ளானும்படுமே-குளுவா
உள்ளானும்படுமே
குலந்தகண்ணியைத்திருத்திக்குத்தடாகுற்றாலமலைமேல் - குளுவா
குற்றாலமலைமேல்

சிங்கன்சொல்-கொச்சகக்கலிப்பா.

கள்ளுலவுகொன்றையத்தார்கர்த்தர்திரிகூடவெற்பில்
பிள்ளைமதிவாணுதலாள்பேசாதவீறடங்கித்
துள்ளிமடிமேலிருந்துதோளின்மேலேறியவள்
கிள்ளிமொழிகேட்கவொருகிள்ளையானேனிலையே,

தரு-இராகம்-கல்யாணி-ஆதிதாளம்,

பல்லவி,

கெம்பாறடையே-பொறுபொறு-கெம்பாறடையே,

அநுபல்லவி.

கெம்பாறடையேநம்பர்குற்றாலர்
கிருபைப்புரவில்பறவைபடுக்கவே
யம்பாகவந்தவுன்சத்தத்தைக்கேட்டல்லோ
வந்தகுருவிகலைந்தோடிப்போகுது. (கெம்பா)

சரணங்கள்,

௧, வருநதயின்களுமேறிவருகுது
எத்திசைப்பட்டகுருகும்வருகுது
நாறுநகண்ணிவைப்பெருக்கக்குத்தியே
நூவனூராணுயிருந்தேழுணைக்கினி
பெருணருவேமருந்தாகிலும்பிதர்
பேசாமல்வாடைப்பொடியாகிலுமனைக்
கூறாகிலுமொருபக்காகிலுமொரு
கொக்காகிலும்நரிக்கொம்பாகிலுந்தாரேன் (கெம்பா)
௨, பூளியுடுத்தழுடித்துவளையிட்டுப்
பொட்டிட்டுமையிட்டுப்பொன்னிட்டுப்பூவிட்டுக்
காசுபறித்திடும்வேசையராசாரக்
கண்ணிக்குள்வேடங்காமுகர்போலவும்
ஆசாரவீனத்துலுக்கன்குதிரை
யடியொட்டிப்பாறையடியொட்டிலுந்போலுந்
தேசத்துக்கொக்கெல்லாங்கண்ணிக்குள்ளேவந்து
சிக்குதுபார்கறிதக்குதுபாவீலிக் (கெம்பா)
௩, ஆலாவும்கொக்குமருகேவருகுது
ஆசாரக்கள்ளர்போல்நாரைதிரிகுது
வேலானகண்ணியராசையினுந்சிறு
மேலுந்திரிந்திடும்வேடிக்கைக்காரர்போல்
காலால்திரிந்துதிரிந்துதிரிந்தெங்கள்
கண்ணிக்குள்ளாகும்பறவையைப்போகட்டுப்
பாவாறுநெய்யாறுபாயின்றவூட்டத்தித்
பல்லொடிக்கச்சிறுகல்லைகப்பட்டாற்போல் (கெம்பா)

கவிக்கூற்று,

ஆசிரியவிருத்தம்,

தேவிதிருக்குழல்வாய்மொழிப்பேர்நாச்சியார்கால் செண்பகக்கால்
திருந்தமதிகுடிஞர்கால், காவியங்கண்ணமைடதட்டான்பற்றுக்
கள்விக்குளமழகர்பள்ளன்கூற்று, வாவித்தொறுநின்றுசிங்கன்வேட்
டையாடிவருவியாற்றுக்காலடைகால்நெல்கால்,கோவில்விளையாட்
டமெக்குங்கண்ணிகுத்திக்கூவிளைனூவிட்டேவிருனே,

சிங்கன் சொல்லுதல்,

இராகம்-தர்பார்-சாபுதாளம்,

கண்ணிகள்,

௧, கல்வித்தமிழ்க்குரியார்திரிகூடநாதர்கர்த்தர்பொற்றுளபரவுஞ்
செல்வக்கடவுளையாள்குற்றுலச்சிவராமநம்பியெங்கோன்

நல்லமணியபட்டன்பெருமைவளர்சங்குமுத்துநம்பி [மையே
வெல்லுங்குற்றாலநம்பி புரவெல்லாம்மீன்கொத்திக் கூட்ட
௨ சீராளன்பிச்சபிள்ளை திருப்பணிசெல்வப்புதுக்குளமும்
காராளன்சங்குமுத்துதிருத்தொடைக்காங்கேயன்கட்டளையும்
வெகுமாராஜன்தென்குடிகைவைத்தியநாதன்புதுக்குளமும்
தாராளமானபுள்ளும்வெள்ளன்னமுந்தாராவுமேவுதையே,
௩, தானக்கணக்குடனேஸ்ரீபண்டாரந்தன்மபத்தர்களுக்கும்
வானவர்குற்றாலத்திருவாசம்மாடநற்பத்தியமும்
நானிதழ்சூழ்குடிகைவைத்தியநாதனர்பாலன்
தானபிமானம்வைத்தசிவராமன்சம்பிரதிகணக்கும்,
௪, வேதநாராயணவேள்குமாரன்விளைத்தொண்டநாடாளன்
சிதான்முத்துமன்னன்விசாரிப்பச்சேர்ந்தபுரவினெல்லாம்
காதலாய்க்கண்ணிவைத்துபறவைக்குக்கங்கணங்கட்டிநின்றே
னேதோவொருபறவைதொடர்ந்துவந்தென்னைக்கடிக்குதையே

சிங்கன் சிங்கியை நினைத்துக்கொள்ளுதல்-விருத்தம்,

சாவலர்திரிகூடத்திற்காதலாற்கலங்கிவந்த
நாவலைப்பறித்துச்சிங்கனோக்கியேவேட்டைகாட்டி
பாவல்சேர்காமவேட்டையாசையாலன்னப்பேட்டைச்
சேவல்போய்ப்புணரக்கண்டான்சிங்கிமேற்பிரமைகொண்டான்,

சிங்கியைநினைத்துப் புலம்பல்,

இராகம் ஆகிரி- சாப்புதாளம்.

௧, எட்டுக்குரலிலொருகுரல்கூவும் புறாவே-யென
தேகாந்தச்சிங்கியைக்கூவாததென்ன குலவே
௨, மட்டார்குழலிதன்சாயலைக்காட்டு மயூரமே-யவள்
மார்பிலெழுந்தமுலையையுங்காட்டிடு சாரமே
௩, தட்டொத்தகும்பத்தடமுலைகட்டுஞ் சகோரமே-சற்றுந்
தன்னென்றும்வெச்சென்றுங்காட்டிவிட்டாலுபகாரமே
௪, கட்டிதிரவியக்கன்போலுநன்னகர்க் காவியே கண்ணிக்
கண்டிடமெல்லாமவளாகப்போற்றுது பாவியே

சிங்கன்சொல் கொச்சகக்கலிப்பா,

செட்டிபடத்திங்கண்ணிவைத்தேன்சிங்கிநடைச்சாயலினுற்
பெட்டைகுளத்திலன்னப்பேடைநடைபார்த்திருந்தேன்
கட்டுற்றநன்னகர்க்கென்கண்ணியெல்லாங்கொற்றிவெற்றிக்
கொட்டிக்கொண்டையே குருவியெல்லாம்போயினுமே,

தரு-இராகம் முகாரி சாப்புதாளம்,

பல்லவி,

போயினுமையே பறவைகள் போயினுமையே

அநுபல்லவி,

போயினுமையேநாயகர்குற்றாலர்
பொல்லாததக்கன்மகத்தையழித்தநாள்
வாயிலடிபட்டிடிபட்டுதைபட்டு
வானவர்தானவர்போனதுபோலவே (போயினு)

சரணங்கள்.

௧, மேடையினின்றொருபஞ்சவர்ணக்கிளி
பின்னோர்கைதப்பியென்முன்னாகவந்தது
பேடையென்றேயதைச்சேவல்தொடர்ந்தது
பின்னொருசேவலுங்கூடத்தொடர்ந்தது
கூடியவின்பயிரண்டுக்குமெட்டாமற்
சுந்தோபசுந்தரர்வந்தகலாபத்திற்
காடெல்லாம்பட்சியாய்க்கூடியுளம்பாடிக்
கண்ணியுந்தட்டியென்கண்ணிலுங்கூட்டியே, (போயினு)

௨, ஆயிரங்கொக்குக்கண்ணியைவைத்துநா
னப்பாலேபோயொருமிப்பாயிருக்கையில்
ஆயிரங்காகங்களாயிரம்பட்டு
மறைத்துவிரைத்துக்கிடப்பதுபோலவே
காயமொடுங்கிக்கிடந்ததுகண்டுதான்
கண்ணிகழற்றிநிலத்திலேவைத்தபின்
சேயிழைதன்பொருட்டாலேபஞ்சாட்சரஞ்
சேவித்தமன்னவன்பாவம்போனாற்போலே, (போயினு)

௩, தப்பமென்றேதம்பிரேறாச்சதிபண்ணித்
தான்வாழப்பார்ப்பவர்செல்வங்கள்போல
பப்பும்வடபாலருவியிற்றோய்ந்தவர்
பாவங்கழுநீராய்ப்போவதுபோலவும்
கும்பமுனிக்குச்சிறுமானகாலங்
குதித்தோடிப்போனவைணர்போலவும்
அம்பிகைபாகத்திரிகூடநாத
ரடியவர்மேல்வந்ததுன்பம்போனாற்போலே, (போயினு)

நூவன் சிங்கனைப்பழித்தல்,

விருத்தம்,

வருக்கையார்திரிகூடத்தின்மாமிமேற்கையும்வெய்ப்
பருத்திமேற்கண்ணுமானபாவைபோல்வேட்டைபோனாய்க்
கருத்துவேறானதாலைக்கற்பித்தயகன்போலெண்ணேச்
சிரித்தனைசிங்காவுன்னைச்சிரித்ததுகாமப்பேயே,

இதுவும்-நூவன்சொல்லுதல்,

விருத்தம்,

கடுக்கையார்திரிகூடத்திற்காமத்தால்வாமக்கள்ளைக்
குடித்தவர்போலேவிழுந்தாய்கொக்குநீபடுத்துவாழ்ந்தாய்
அடிக்கொருநினைவன்சிங்காவாசைப்பேயுனைவிடாது
செடிக்கொருவலையும்போட்டுச்சிங்கியைத்தேடுவாயோ

சிங்கன்-நூவனுக்குச்சொல்லுதல்,

விருத்தம்,

வேடுவர்கள்ளியோர்நாண்மெயிலாதவனேயென்னை
ஆடலிச்சொன்னபேச்சாலுருவிலிபசைத்தானென்மேற்
போடுவான்புட்பபாணம்புறப்பட்டமாட்டேனூவா
சேடர்திரிகூடத்திற்சிங்கியைத்தேடுவாயே,

நூவன்சொல்-விருத்தம்.

அங்கணர்திரிகூடத்திலவளைநீயணைந்தாலென்ன
நங்களைப்பிரிந்தாலென்ன நூவனுக்குண்டோநட்டங்
கங்கணமெனக்கேன்சிங்காகாசிலையுனக்குண்டானாற்
கொங்கணச்சிங்கிதன்னைக்கூட்டிவாகாட்டுவேனே,

தலங்கள் தேடிப்போன,

விருத்தம்.

திருவண்ணாமலைகாஞ்சி திருக்காளத்திசீர்காழிசிதம்பரந்தென்னூர்காசி, குருநாடுகேதாரங்கோலகொண்டைகோகரணஞ்செகநாதங்கும்பகோணம். ஆரியலூர்சிரகந்திருவானைக்காவடங்கலும்போய்ச்சிங்கிதனைத்தேடிச்சிங்கன், வருசிராப்பள்ளிவிட்டுமதுரைதேடிமதிகொண்டான்றிரிகூடமெதிர்கண்டானே.

வில்லிபுத்தூர்கருவைநல்லூர்புன்னைக்காவுவேள்திருச்செந்தூர்குருகூர்ஸ்ரீவைகுந்த-நெல்வேலிசிங்கிகுளந்தேவநல்லூர்நிலைதருச்சிற்றூர்குமரிதிருவாங்கொடு, சொல்லரியகுருங்கைகளக்காடுதேடித்தொன்மருத்தூர்த்தான நல்லூர்தேடிச், செல்வருநறைசிவசைலம்பாவநாசந்திரிகூடச்சிங்கிதனைத்தேடுவானே,

சிங்கன்-சொல்லுதல்,

இராகம்-நீலாம்புரி-ஆதிதாளம்,

கண்ணிகள்,

க, பேடைகுயிலுக்குக்கண்ணியைவைத்துநான்மாடப்புறாவுக்குப் போனேன், மாடப்புறாவுங்குயிலும்படித்தேன் வேடிக்கைச்சிங்கியைக்காணேன்,

உ, கோலமயிலுக்குக்கண்ணியைவைத்து நானுலாப்படுக்கவேபோனேன், ஆலாவுங்கோலமயிலும் படுந்தேன்மாலானசிங்கியைக்காணேன்,

௩, வவ்வாற்பறவையின்வேட்டைக்குப்போய்க்காமவெவ்வேட்டை தப்பிவிட்டேன்-வவ்வால்படுக்க மரநாயகப்பட்டவைபோகமாச்சதுதானே,

௪, இவ்வாறுவந்தவென்வெஞ்சில் விகாரத்தையெவ்வாறுதீர்த்துக்கொள்வேனே, செவ்வாய்க் கரும்பையறுகராகவஞ்சியைசிங்கியைக்காணுகிலேனே,

குற்றாலத்தில் சிங்கன்-சிங்கியைத்தேடுதல்,

விருத்தம்,

நற்றாலதன்னிலுள்ளோர்யாவரோனு நன்னகரத்தலத்தில்வந்து பெறுவார்பேறு, பெற்றார்தாநன்னகரதலத்தைவிட்டாற் பிரமலோகம்வனைக்கும்பேறுண்டாமோ, வற்றாதவடவருவிச்சாரனிங்கி வடகாசிகுமரிமட்டுமலைந்தசிங்கன், குற்றாலந்தலத்தின் முன்னேதவத்தால்வந்துகூடினான்சிங்கிதனைத்தேடினானே,

சிங்கியைக்காணுமற்புலம்பல்,

தரு-இராகம்-தோடி-ஆதிதாளம்

பல்லவி.

சிங்கியைக்காணேன்-யென்வங்கணச் சிங்கியைக்காணேனே,

அநுபல்லவி.

சிங்கியைக்காமப்பசுங்கிளிப்பேடையைச்
சீர்வளர்குற்றாலர்பேர்வளம்பாடிய
சங்கீதவாரியையிங்கிதநாரியை
சல்லாபக்காரியையுல்லாசமோகன (சிங்கியை)

சரணங்கள்.

௧. ஆரத்தநத்தைப்படங்கொண்டுமூடியசைத்துநின்றாளதையானைக்கொம்பென்றே கோரத்தைவைத்தவிழிக்கெதிர்சென்றேன்கொஞ்சத்தனத்தையறிந்துசுகக்காரி யாரத்தனத்தைத்திறந்துவிட்டாள்கண்டுபாவியனுவிமறந்துவிட்டேனுடன் - திரக்கனியமயக்கிமுயக்கியேசிங்காரமோகனச்சிங்கிகொண்டாளந்த. (சிங்கி)

உ, பூவென்றபாதம்வருடிவருடிபுள்சமுலையை நெருடிநெருடியே வென்றககண்ணுக்கோரஞ்சனந் தீட்டியெடுத்துச்சுருளேயிதழாவிடுக்குவள்வாவென்றுகைச்சுருள்தானென்று நானுமக்குறிகண்டுநகக்குறிவைத்தபின், ஞவென்றொருக்காலுனாப்பளதுக்குக்கிந்துகொதிக்குதென்பேய்மனம், (சிங்கி)

௩, தாராவெங்குன்றிவடத்தையொதுக்கித்தடமார்பிறுகத்தழுவவந்தா லவன், வாராவெங்கொங்கைக்குச்சந்தனம்பூசாள்மறுத்துநான் பூசி னும்பூசலாகாதென்பள்- சீராடிக்கூடிவிளையாடியிப்படித்திராம லெத்தந்திராணிமைக்காரியைத் காராடுகண்டர்தென்னாட்டுறைகாரி கைப்பூவைவையாரியப்பாவையைச். (சிங்கி)

நூவன்-வினவுதல்-

கொச்சகக்கலிப்பா.

சங்கமெல்லாமுத்தினுஞ்சங்கர்திரிகூடவெற்பிற்
பொங்கமெல்லாஞ்செய்யுமுங்கள்பொங்கமெல்லாம்யாரறிவார்
சிங்கமெல்லாமொத்ததுடிசிங்காவுன்சிங்கிதனைக்
கங்கமெலாஞ்சொல்லியடையாளஞ்சொல்வாயே.

தரு-இ-ம் பியாகடை-மிசுரதாளம்,

பல்லவி,

கறுப்பிலழகியடா காமச்

அநுபல்லவி.

சுறுக்கிலழகிசிங்கி-சுகக்காறி. (கறுப்பி)

சரணங்கள்,

௧, கண்களிரண்டுமம்புகளைபோலநீண்டிருக்கும்
கையைத்தனையகலங்காணுமடா
பெண்களிமயக்குமவள்விரகப்பார்வை
சிங்கிபிடித்தாமதப்பயலும்பெலப்பானே, (கறுப்பி)

௨, நகையுமுகமுமவள்நாணையக்கைவீச்சும்
பகைவரும்பிரிந்துபார்ப்பாரடா
தொகையாச்சொன்னேனினிச்சொல்லக்கூடாதொரு
வகையாய்வருகுதென்னைமயக்குதையேஐயே. (கருப்பி)

௩, விடையில்வரும்பவனியுடையர்திருக்குற்றாலர்
சடையிலிளம்பிறைபோல்தனிநுதலாள்
நடையிலழகுமிருதுடையிலழகுமவ
ளுடையிலழகுமென்னையுருக்குதையேஐயே. (கறுப்பி)

கொச்சகக்கலிப்பா,

சாட்டிநிற்குமண்டமெல்லாஞ்சாட்டியில்லாப்பம்பரம்போ
லாட்டுவிக்குங்குற்றாலத்தண்ணலார்நன்னாட்டில்
காட்டுவிக்குமுன்மோகக்கண்மாயச்சிங்கிதனைக்
கூட்டிவைக்கும்பேர்களுக்குக்கூலியென்னசொல்வாயே,

இராகம்-தர்பார்-ரூபகதாளம்,

கண்ணிகள்.

௧. வாடைமருந்துப்பொடியும் அம்மியூர
மரப்பாவைபின்தொடரமாயப்பொடியும்
௨. கூடியிருக்கமருந்தும் இருபொழுதும்
கூடியிருப்பார்களைக்கலைக்கமருந்தும்
௩. காமகட்டக்கிளிக்கட்டு குறளிவித்தை
கண்கட்டுவித்தைகளுங்காட்டித்தருவேன்
௪. வேடிக்கைக்காமரதிபோல் திரிகூட
வெற்பிலுறைசிங்கிதனைக்காட்டாயையே
௫. மலையைக்கரையப்பண்ணுவேன் குமரிகட்டு
வாராதமுலைகளும்வரப்பண்ணுவேன்
௬. முலையையொளிக்கப்பண்ணுவேன் ஒளித்தபோனா
மோகினிமந்திரஞ்சொல்லிவரப்பண்ணுவேன்
௭. திலதசிரகஞ்செய்வேன் ஒருவருக்குந்
தெரியாமற்போகவரச்சித்துமறிவேன்
௮. கலைமதனம்பயலை வெண்மதிற்கண்
காட்டிவிட்டசிங்கிதனைக்காட்டாயையே

நூவன்-சொல்லுதல்.

கொச்சகக்கலிப்பா,

ஆற்றைநான்கடத்திவிட்டா லாகாசமார்க்கமோடத்
தேற்றநீயறிவாயல்லோ திரிகூடமலையிற்சிங்கா
சாற்றுமூண்மருந்துபோலச் சகலர்க்குங்குறிகள்சொல்லி
போற்றுமுன்சிங்கிபோன புதுத்தெருவிற்கண்டாயே,

சிங்கன்-சிங்கியைக்காணமல் வருந்தல்.

தரு-இராகம்-முகாரி-ஆதிதாளம்,

பல்லவி.

எங்கேதான்போனாளையே என்சிங்கியிப்போ
எங்கேதான்போனாளையே,

அநுபல்லவி,

சங்காளர்திரிகூடர்கர்த்தர்திருநாடுதனில் (எங்கே)

சரணங்கள்.

௧. வேளாகிலும்பக்குவள் வலியதட்டில்
கேளாமலுமுயக்குவள்
ஆளாயழகனுமாயானையெங்கேகண்டாளோ
தோளாசைக்காரிசிங்கிதுமாமிடக்கமாட்டாள் (எங்கே)

உ,மெய்க்குறியாலெங்கும்வெல்லுவள் மனக்குறியுங்
கைக்குறியுங்கண்டுசொல்லுவள்
திக்கிலடங்காதகுறியிக்குளடங்காதுமொழி
மைக்குளடங்காதுவிழிகைக்குளடங்காதகள்வி (எங்கே)
௩,சித்திரச்சபேசர்மேலே-சிவசமயப்
பத்தியில்லாப்பேயர்போலே
குற்றியிலராக்குங்களுங்குடுவையிற்றென்னங்களும்
அத்தனையுங்குடித்துப்போட்டார்பிறகேதொடர்ந்தாளோ

சிங்கியெதிர்ப்படுதல்,

விருத்தம்,

சித்மதிபுனைந்தகுற்றாலநாதர்திருநாட்டிலிருவருந்தாங்கண்ட போதே, காதிலெனுங்கடல்பெருகித்தரிகொள்ளாமற் கைகலக்கும் போதுவலகுறுக்கிட்டாற்போல், வீதிவந்துகுறுக்கிடவேநாணம் பூண்டவின்னுளைச்சிங்கிதனைக்கண்டுசிங்கன், தூதுவந்தநளனுமு ன்கன்னிமாடந்துலங்குதமயந்தியெனத்தோன்றினளே,

தரு-இராகம்-எதுகுலகாம்போதி-சாப்புதாளம்,

பல்லவி,

இங்கேவாராய் என்கண்ணே இங்கேவாராய்,

அநுபல்லவி.

இங்கேவாராய்மலர்ச்செங்கைதாராய் மோகச்-சங்கையாராய்
காமச்சிங்கியாரோயிப்போ (இங்கே)

சரணங்கள்,

க,பாதம்நோமே நொந்தால்-மனம்-பேதமாமே
பாதம்நோகநிற்பதேது பாவயினிகூத லோகொடிதுகாதலோகடினம் (இங்கே)

உ,பாவிதானே-மதன்கணை-எவினனே
காவில்மாங்குயில்கள்கூவிக்குவியெனதாவிசோருதன்னையாவியாவிகட் (இங்கே)

௩,வருக்கைமூலர்வடவருவித்-திருக்குற்றாலர்
பெருக்கம்பாடிக்கொள்ள மருக்கள்சூடிக்கொள்ள ஒருக்காலாடிக் கொள்ளஇருக்கால்கூடிக்கொள்ள, (இங்கே)

சிங்கன்-சிங்கியைக்கண்டு-மகிழ்தல்.

கொச்சகக்கலிப்பா,

தெண்டாடுஞ்சுந்தரர்நகுத்தோழர்திரிகூடவேற்பிற்
றிண்டாடிநின்றசிங்கன்சீராடுஞ்சிங்கிதனைக்

கண்டாடித் துள்ளாடிக் கள்ளாடித் தம்பியைப்போற்
கொண்டாடிக்கொண்டாடிக்கூத்தாடிக்கொண்டானே.

சிங்கனுக்குஞ் சிங்கிக்குஞ் சம்வாதம்,
இராகம்-தன்னியாசி-ஆதிதாளம்,
கண்ணிகள்,

சிங்கன்-இத்தனைநாளாகவென்னுடன்சொல்லாமல்
எங்கேநடந்தாயடிசிங்கி — எங்கே
சிங்கி-கொத்தார்குழலார்க்குவிஸ்தாரமாகக்
குறிசொல்லப்போனேனடாசிங்கா — குறிசொல்
சிங்கன்-பார்க்கிலதிசயந்தோணுது சொல்லப்
பயமாயிருக்குதடிசிங்கி — பயமா
சிங்கி-ஆர்க்குப்பயமினித்தோணினகாரியம்
அஞ்சாமற்சொல்லடாசிங்கா — அஞ்சா
சிங்கன் காலுக்குமேலேபெரியவிரியன்
கடித்துக்கிடப்பானேன்சிங்கி — கடித்து
சிங்கி சேலத்துநாட்டிற்குறிசொல்லிப்பெற்ற
சிலம்புகிடக்குதடாசிங்கா — சிலம்பு
சிங்கன்-சேலத்தாரிட்டசிலம்பிற்குமேலே
திருகுமுறுக்கென்னடிசிங்கி — திருகுமு
சிங்கி-சோலத்துநாட்டார்முறுக்கிட்டதண்டை
கொடுத்தவரிசையடாசிங்கா — கொடுத்
சிங்கன்-நீண்டுகுறுகியுந்நாங்கூழ்ப்போல
நெளிந்தநெளிவென்னடிசிங்கி — நெளிந்த
சிங்கி-பாண்டியனார்மகள்வேண்டுங்குறிக்காகப்
பாடகமிட்டதடாசிங்கா — பாடக
சிங்கன்-மாண்டத்தவளையுன்காலிலேகட்டிய
மார்க்கமதேதடிசிங்கி — மார்க்கம
சிங்கி-ஆண்டவர்குற்றாலர்சந்நிதிப்பெண்க
ளணியணிக்கெச்சமடாசிங்கா — அணிமணி
சிங்கன்-சுண்டுவிரல்தோறுங்குண்டலப்பூச்சி
சுருண்டுகிடப்பானேன்சிங்கி — சுருண்
சிங்கி-கண்டியதேசத்திற்பண்டுநான்பெற்றது
காலாழிபீலியடாசிங்கா — காலாழி

சிங்கன் மெல்லியபூந்தொடைவாழைக்குருத்தை
விரித்துமடித்தவரார்சிங்கி — விரித்து
சிங்கி-நெல்வேலியார்தந்தசல்லாபச்சேலை
நெறிபிடித்தேகொடுத்தார்சிங்கா — நெறிபி
சிங்கன்-ஊருக்குமேற்கேயுயர்ந்தவரசிலே
சாரைப்பாம்பேதுபெண்ணேசிங்கி — சாரை
சிங்கி சீர்பெற்றசோழன்குமாரத்தியார்தந்த
செம்பொன்னாணடாசிங்கா — செம்பொ
சிங்கன்-மார்பிற்குமேலேபுடைத்தசிலந்தியில்
கொப்புளங்கொள்வானேன்சிங்கி — கொப்பு
சிங்கி-பாருக்குள்ளேற்றமாய்க்காயங்குளத்தார்தந்த
பாரமுத்தாரமடாசிங்கா — பாரமு
சிங்கன் ஆகாவடமெல்லாமங்ஙனேகூடவே
ஆவாரைபூத்தடிசிங்கி — ஆவாரை
சிங்கி-ஏகாவடமென்றுசீர்காழியாரெனக்
கிட்டவரிசையடாசிங்கா — இட்டவரி
சிங்கன்-எட்டுப்பரவைகுமுறுஞ்சமுத்திலே
பத்தெட்டுப்பாம்பேதடிசிங்கி — பத்தெட்
சிங்கி குட்டத்துநாட்டாருங்காயங்குளத்தாரும்
இட்டசவளியடாசிங்கா — இட்டச

மேற்படி-வேறு,

இராகம்-புன்னாகவராளி-ஆதிதாளம்,

கண்ணிகள்,

சிங்கன் வள்ளிக்கொடியிலேதுத்திப்பூப்பூப்பானேன் — சிங்கி
சிங்கி-காதில்-வங்காளத்தாரிட்டசிங்காரக்கொப்படா — சிங்கா
சிங்கன்-கள்ளிப்பூபூப்பத்திசயமல்லவோ — சிங்கி
சிங்கி-தெற்கு வள்ளியூரார்தந்தமாணிக்கத்தண்டோடடா — சிங்கா
சிங்கன்-வண்ணக்குமிழிமேலேபுன்னையரும்பேது — சிங்கி
சிங்கி மண்ணில்-முன்னீர்ச்சலாபத்துமுத்துமூக்குத்திகாண் — சிங்கா
சிங்கன்-சொருகிமுடித்ததில்தூக்கணமேதடி — சிங்கி
சிங்கி-தென்குருகையூரார்தந்தகுப்பியுந்தொங்கலுங் — சிங்கா
சிங்கன்-விந்தையாய்மேலெல்லாமின்வெட்டியார்ப்பனேன் — சிங்கி
சிங்கி-இந்தவண்ணப்பணிகளின்மாணிக்கக்கல்லொளி — சிங்கா
சிங்கன்-முலையென்றுசொல்வதைமூடிக்கிடப்பானேன் — சிங்கி

சிங்கி-செஞ்சி-விலைமாதர்தந்ததுவேடிக்கைக்கச்சடா சிங்கா
சிங்கன் முடிக்கிடப்பவுந்நாற்றங்குலைப்பானேன் சிங்கி
சிங்கி இது-ஆடித்திருத்தங்கால்வாடைப்பொடியடா சிங்கா
சிங்கன்-அந்தப்பொடியால்முலைவீக்கம்போகுமோ சிங்கி
சிங்கி-வீக்கம்-ஆனாலுனக்கென்னபோனாலுனக்கென்ன சிங்கா
சிங்கன் இந்தப்பனையைநீபூணப்பொறுக்குமோ சிங்கி
சிங்கி புவி-ஈசர்க்குங்கற்றோர்க்குமெல்லாம்பொறுக்குங்காண் சிங்
சிங்கன் குல்லத்தைப்பார்த்தால்கொடியிடைதாங்குமோ சிங்கி
சிங்கி-தன்-கொடிக்குச்சுரைக்காய்கனத்துக்கிடக்குமோ சிங்கா
சிங்கன்-இல்லாதசித்தெல்லாலெங்கேபடித்தாடி சிங்கி
சிங்கி நாட்டில் நல்லரைக்கண்டாருக்கெல்லாம்வருமடா சிங்கா
சிங்கன் பெட்டகப்பாம்பைப்பிடித்தாட்டவேண்டாமோ சிங்கி
சிங்கி-இந்த-வெட்டவெளியிலேகோடிப்பாம்பாடுமோ சிங்கா
சிங்கன்-கட்டிக்கொண்டேசற்றேமுத்தங்கொடுக்கவோ சிங்கி
சிங்கி-நடுப்-பட்டப்பகலில்நானெட்டுக்கொடுப்பேனோ சிங்கா
சிங்கன்-மூட்டப்படாமுலையானையைமூட்டவோ சிங்கி
சிங்கி-காமம்-மட்டுப்படாவிட்டால்மண்ணோடேமுட்டடா சிங்கா
சிங்கன்-சேலையுடைதன்னைச்சற்றேநெகிழ்க்கவோ சிங்கி
சிங்கி-சும்மா நாலுபேர்முன்னென்னை நாணங்கெடுக்காதே சிங்கா
சிங்கன்-பாதம்வருடித்துணைகுத்தவேண்டாமோ சிங்கி
சிங்கி மனம்-போதவருடிப்போய்ப்பூனையைக்குத்தடா சிங்கா
சிங்கன் நாக்குதுடிக்குதுநல்வாயிதழுக்கு சிங்கி
சிங்கி உன்றன் வாய்க்குருப்பதுமாலைக்கள்ளல்லவோ சிங்கா
சிங்கன் ஒக்கப்படுக்கவொதுகிடம்பார்க்கவோ சிங்கி
சிங்கி-பருங்-கொக்குப்படுக்கக்குறியிடம்பாரடா சிங்கா
சிங்கன் வித்தைக்காரியுன்னைவெல்லக்கூடாதபடி சிங்கி
சிங்கி-அது சந்தேகமோவுன்தலைப்பேனைக்கேளடா சிங்கா
சிங்கன்-தென்னாடெல்லாமுன்னைத்தேடித்திரிந்தேனே சிங்கி
சிங்கி-அப்பா-விந்நாட்டில்வந்தென்னையெப்படிநீகண்டாய் சிங்கா
சிங்கன்-நன்னகர்குற்றாலநாதனை வேண்டினேன் சிங்கி
சிங்கி-மணிப்-பன்னகம்பூண்டானைப்பாடிக்கொண்டாடுவோம் சி
சிங்கன் பாடிக்கொள்வாரெவராடிக்கொள்வாரெவர் சிங்கி
சிங்கி-நீதான் பாடிக்கொண்டாற்போதுமாடிக்கொள்வேனடா சிங்

நேரிசைவெண்பா,

சுற்றுதலூர்தோறுஞ்சுற்றவேண்டாம்புலிவீர்
குற்றாலமென்றொருக்காற்கூறினால்-வற்றா
வடவருவியானைமறுபிறவிச்சேற்றி
னடவருவியானேநமை,

வாழ்த்து,

கண்ணிகள்,

௧, கொற்றமதிச்சடையானைக்குறும்பலாவுடையானை
வெற்றிமழுப்படையானைவிடையையவாழ்த்துகிறேன்

௨, தாதையில்லாத்திருமகனைத்தடமலைக்குமருமகனை
வேதசங்கதுதியானைவேதியனைவாழ்த்விகிறேன்

௩, தந்திமுகத்தொருகோனைத்தமிழ்தஞ்சிமுருகோனை
மைந்தரெனுமிறையோனைமறையோனைவாழ்த்துகிறேன்

௪, தீமுகத்திற்பறிகொடுத்ததிருமுடிக்காயொருமுடியை
மாமனுக்குவரிசையிட்டமகனைவாழ்த்துகிறேன்

௫, காமனுக்கும்பூமனுக்குங்கன்னிதெய்வயானைக்கும்
மாமனெனவேபகரும்வள்ளறன்னைவாழ்த்துகிறேன்

௬, நீடுலகெலாமளந்தநெடியமாலுமயனும்
தேடரியதிரிகூடற்செல்வனையான்வாழ்த்துகிறேன்

௭. சித்ரநதியிடத்தானைத்தேனருவித்தடத்தானைச்
சித்ரசபைநடத்தானைத்திடத்தானைவாழ்த்துகிறேன்

௮, காலவயிரவனைக்காவில்வளர்த்தவனை
மேலவாசலப்பனைமேன்மேலும்வாழ்த்துகிறேன்

௯, கருதுலகமெங்கும்புகழ்கன்னிமார்பெண்களையும்
வரிசைதுறைத்தளவாய்மாடனையும்வாழ்த்துகிறேன்

௰, பனகமணிபூண்டவனைப்பக்தர்களையாண்டவனை
அனவரதத்தாண்டவனையாண்டவனைவாழ்த்துகிறேன்,

இதுவுமது-விருத்தம்.

வார்வாழுந்தனத்திகுழல்வாய் மொழியம்பிகைவாழிவதுஙவ பூட்டுந், தார்வாழிதிரிகூடத்தார்வாழிகுறுமுனிவன்றலைநாட்சொன்ன, பேர்வாழியரசர்கள்செங்கோல்வாழிநன்னகரப்பேராலோங்கும், ஊர்வாழிகுற்றாலத்தலத்தடியர்வாழிநீடூழிதானே,

திருக்குற்றாலக்குறவஞ்சி.

முற்றிற்று.